
# பாலம்

ஜூலை-
ஓகஸ்ட்
1998



PAALAM
Tamil Monthly Magazine
SE - nr. 20 20 05 45

ஜூலை - ஓகஸ்ட்
1998
பாலம்
சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை

தொடர்புகட்கு:
PAALAM PUBLICATIONS
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96

அச்சுப் பதிப்பு
**வாசன் அச்சகம்**
லண்டன்
+ 44 181 646 2885

# மேலும் புதிய விடயங்கள்!

இம்முறை பாலம் இரண்டு இதழ்களை ஒன்றாக இணைத்து வெளிவருகிறது. சிறிது சிறிதாக ஏற்பட்டுவிட்ட கால இடைவெளியைத் தவிர்ப்பதற்காக வேண்டியே இரு இதழ்களை ஒன்றாக்கியுள்ளோம். சந்தாதாரரும், விற்பனையாளரும், வாசகரும் இதைப் பெருமனதுடன் புரிந்துகொள்வார்களென உணர்கிறோம்.

பல நாடுகளிலிருந்தும் பல்வேறு கோணங்களில் அபிப்பிராயக் கடிதங்கள் கிடைத்துள்ளன. அவற்றை நோக்கும் போது ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடையே உள்ள புதிய தேவைகளுக்குரிய பணியையே பாலம் சஞ்சிகை நிறைவேற்ற முயல்கிறதென்னும் நம்பிக்கை தொடர்ந்தும் வலுப்பெறுகிறது.

நமது மக்களிடையே வாசிப்புணர்வைத் தூண்டி இரண்டாவது தலை முறையினரும் ஆர்வத்துடன் படிக்கவேண்டிய விடயங்களை உள்ளடக்கி, பழமையிலிருந்து புதுமை வரை பல்வேறு விடயங்களையும் தேனீக்கள்போலப் பறந்து திரிந்து, சேகரித்து உங்கள் கரங்களில் தருகிறோம். எங்கு சேகரித்தோமென்ற விடயங்களையும் இயன்றவரை ஆதாரங்களுடன் தர முயல்கிறோம்.

இதுவரை மக்கள் கரங்களில் புரண்ட பாலத்தின் இதழ்கள் அதன் அவசியத்தை உறுதிப்படுத்தியுள்ளன என்பது அளவான கணிப்பீடாக இருக்குமென்றும் நினைக்கிறோம். அடுத்த கட்டமாக மேலும் பல காத்திரமான விடயங்களை உள்ளடக்கி பாலம் வெளிவர இருப்பதைக் கூறுவதில் மகிழ்வடைகிறோம்.

ஒரு ஆண்டுக்கான சந்தா

பிரான்ஸ் – 180 FFr. சுவிஸ் – 48 Sfr. ஜேர்மனி – 50 Dm.
டென்மார்க் – 200 Dkr. நோர்வே – 200 Nkr. இங்கிலாந்து – 20 £
கனடா – 45 C$. அவுஸ்ரேலியா – 45 A$
ஏனைய நாடுகள் – 20 £

சந்தா அனுப்பவேண்டியவங்கி / கணக்கு இல:
PAALAM PUBLICATIONS
A/C # 3406 3406689468
DEN DANSKE BANK
ØSTERGADE 1
7430 IKAST
DENMARK

*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*



# உள்ளே...



பக்கம்—04
தோண்டினால் விக்கல் தோண்டாவிட்டால் சிக்கல்



பக்கம்—6
மீண்டும் ஒருமுறை ஐ.நா நோக்கி



பக்கம்—21
வாசிப்புக்கல்வி



பக்கம்—24
உலகக்கிண்ண உதைபந்தாட்டம்



பக்கம்—28
அமெரிக்க அதிபரின் சீன விஜயம்



பக்கம்—46
யாழ் முரி 98

| | பக்கம் |
|---|---|
| நல்லூர் இராஜதானி | 8 |
| டக்ளஸ் இங்கிள்பாட் | 11 |
| தேடலும் தெளிவும் | 14 |
| திரைப்படத் தொழில் நுட்பம் | 30 |
| ஜேர்மனியில் மூன்று நிகழ்வுகள் | 32 |
| 2000ம் ஆண்டு உலகம் அழியுமா? | 42 |

# தோண்டினால் விக்கல்!

# தோண்டாவிட்டால் சிக்கல்!!

ஜூலை என்றால் பொதுவாக சிங்களத்திற்கு வயிறு கலக்கும். செமியாப் பண்டத்தை உண்டுவிட்ட மாதிரியாய் உபாதை கொண்டு அது நெளியும். நெருப்பை மடியில் கட்டிய தோறணையில் அது தவிக்கும்.

என்றோ வரலாற்றில் விட்ட பெரும் தவறுக்காய் அது இந்த வருடமும் அவஸ்தைப்பட்டது. புத்திக்குறைவான பேர்வழி ஒரு தவறில் இருந்து மீள மீண்டும் மீண்டும் தவறிளைப்பதுபோல, சிங்களமும் மீண்டும் மீண்டும் தவறிழைத்துக்கொள்கின்றது.

ஜூலை இனப்படுகொலையின் நினைவில், புலிகள் பாரிய தாக்கு தலை நடத்தக்கூடும் என்ற பயம் கௌவித்தின்ன, அது ஏதேதோ எல்லாம் செய்தது. தமிழர்களைக் கொத்துக்கொத்தாய் கைதுசெய்து சிறையில் அடைத்தது.

தமிழர்களைக் காணும் இடத்தில் வழிமறித்து துருவித்துருவி விசாரித்து. சோதனைசெய்தது. விலங்கிட்டது.

இந்த மாதத்தில் சிங்களத்தின் தலைநகருக்கு பெரும் பாதுகாப்பு. பெட்டிக்கடைகள் போல ஆங்காங்கே சந்திக்குச்சந்தி சென்றிப் பொயின்றுகள் முளைத்தன. ஊரைக் காக்கும் தோரணையில், கனத்த துப்பாக்கி காவிய சிங்களச் சிப்பாய்கள் மண் மூட்டைகளுக் குப் பின்னால் மறைந்து தம்மைக் காத்துக்கொண்டு காவல் இருந்த



சாத்திரியார்

னர். எதிரிப்படையின் படையெடுப்பை எதிர்கொள்ளும் பாங்காய் கொழும்பு நகர் காட்சியளித்தது.

இம்முறை இரட்டிப்புப் பாதுகாப்பு. ஜூலை படுகொலைப் பயம் ஒரு பக்கம் எனில், சார்க் மாநாட்டுப் பாதுகாப்பு மறுபுறம். 29–ம் திகதி ஆரம்பித்த மாநாட்டுக்குப் பாதுகாப்பு வழங்க, சிங்களப்படை பாடசாலைகளை மூடியது. அலுவலகங்களை மூடியது. வீதிகளை அடைத்தது. ரயில் போக்குவரத்தை நிறுத்தியது. சர்வதேச விமானப் போக்குவரத்தின் நேர அட்டவணைகளைக்கூட அது மாற்றியமைத்தது.

1987–ம் ஆண்டு ஜூலை 5–ம் திகதி, நெல்லியடி, சிங்கள ஆக்கிரமிப்பு முகாமுள் புயல் எனப் புகுந்து இடியென இறங்கிய கரும்புலி கப்டன் மில்லரின் நினைவு நாளும் கூடவே வருவதால், ஜூலை மாதத்தில் கூடுதல் நெஞ்சிடியாகி விட்டது சிங்களத்திற்கு.

தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதுபோல, சிங்களத்தின் கலக்கத்தை சொற்களில் அடுக்குவது இலேசுப்பட்ட காரியமல்ல.

உண்ணாவிரதப்போராட்டம் நடத்திய தமிழ்க் கைதிகளை, அதனைக் கைவிடச் செய்வதற்காக அரச தூதுவராய் சென்ற டக்ளஸ் தேவானந்தா, தமிழ்க் கைதிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டதும், உயிர் போகக்கூடிய நிலைக்கு முன்னராக, சிறை அதிகாரிகளால் மீட்கப்பட்டதும், ஜூன் மாத இறுதிப் பகுதியில் நடந்தது.

மாதுபவன்

பின்னர் அவர் சந்திரிகாவினால் சிங்கப்பூர் அனுப்பப்பட்டு, சிகிச்சை பெற்றுத் திருப்பியதும் இம்மா தத்து சிறிய நினைவுக் குறிப்புகள்.

இந்த மாதம், பெரிதாக தாக்கு தல் நடத்தப்படலாம் என தமிழரை விட சிங்கள அரசாங்கம் பெரிதாக எதிர்பார்த்திருந்த போதும், அப்படி பெரிய தாக்குதல் எதனையும், இம் மாதம் தன் சாதனைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவில்லை. என்றா லும் தமிழீழத்தின் அனைத்துப் பகுதி களிலும் சிறிதும் பெரிதுமான பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 1–ம் திகதி புதூர் பகுதியில், ஜெய சிக்குறு படை நிலைகளை ஊடறுத் துச் சென்று நடத்திய கண்ணி வெடித்தாக்குதலில், விமானப்ப டையினர் 9 பேர் கொல்லப்பட்ட துடன் இந்த மாதம் ஆரம்பமானது.

திருகோணமலை, மட்டக் களப்பு, மன்னார் என விரிந்த தாக்குதல்கள், குடாநாட்டிலும் தன் கைவரிசையைக் காட்டியது.

குடாநாட்டில், குருநகர், சின் னக்கடைப் பகுதியில் ஒரே நேரத் தில் பெரும் தாக்குதலை நடத்தி, சிங்களப்படையின் பல நிலை களை விடுதலைப் புலிகள் கைப் பற்றினர். புதிய இராணுவ உத் தியோ என்னவோ தெரியவில்லை. விடுதலைப் புலிகள் வந்த வேகத்தை

**யு.என்.பி காலத்தில் சிங்கள இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்ட சூரியக்கந்தைப் புதைகுழியை மண்வெட்டி கடப்பாரையுடன் சென்று அமைச்சர்களே முன்னின்று தோண்டியதுபோல் இதனைத்தோண்டமுடியாது. ஏனெனில், சந்திரிகாவின் தலைமையில் உள்ள சிங்களஇராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலைகள் இவை.**

விட படுவேகமாக சிங்கள இராணு வம் ஓடித்தப்பித்துக் கொண்டது. சிறை வைக்கப்பட்டிருந்த புலி களை தாக்குதல் நடத்திய புலிகள் மீட்டுச் சென்றதாகவும், இராணு வத்தினரைப் பிடித்துச் சென்ற தாகவும் பலதரப்பட்ட செய்திகள் உலாவுகின்றபோதும், விடுதலைப் புலிகள் இதனைத் தெரிவிக்காத வரையில் அதனை ஊகங்களாக விட்டுவிடுவதே நல்லது.

இந்த மாதத்தில் ஒரு முக்கிய மான பிரச்சினையும் கவனத்திற் கொள்ளவேண்டியதாகவே உள் ளது. யாழ் சுண்டிக்குளி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது தாய், தம்பி, மற்றும் அயல வர் ஆகியோரின் படுகொலை வழக்கிற்கான தீர்ப்பு வழங்கப்பட் டிருக்கின்றது. இந்த படுகொலை உலகத்தின் கண்களையும் காதுக ளையும் உறுத்திய நிலையிலேயே விசாரணைகள் ஆரம்பமாகின என்பது ஒருபுறம் இருக்க, இந்த வழக்கில் ஆறு சிங்களப்படையின ருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இது சிங்களத்தின் கடந்தகால வரலாற்றை மாற்றியமைக்கும் வர லாற்றுத் தீர்ப்பாக காட்ட முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை வெறும் கண் துடைப்புத் தீர்ப்பு என்பதை காலம் வெகுவிரைவில் காட்டும் என்பதே உண்மை.

இந்தத் தீர்ப்பு நாளன்று, இன்னு மொரு புதுமை அரங்கேறியது. தூக்குத் தண்டனைக் குற்றவாளி தீர்ப்பு வழங்கப்படுவதற்கு சில கணங்களுக்கு முன் தெரிவித்த தகவல் சிங்களத்திற்கு பெரும் தலைவலியாகியுள்ளது. 400 சட லங்கள் செம்மணியில் புதைக்கப் பட்டிருப்பதையும், அதிகாரிகள் அனுப்பும் சடலங்களை புதைப் பதே தமது மாலைநேரத்துப்பணி எனவும் அவன் அங்கு தெரிவித் திருந்தான். இன்னும் சில தமிழர் கள், கொன்று புதைக்கவும் என்ற குறிப்புடன் அனுப்பப்படுவதா கவும், அவர்களை கொன்று புதைப்பதும் தமது நாளாந்தப் பணி எனவும் அவன் தெரிவித் துள்ளான்.

இது இன்னும் ஒரு பெரும் தலைவலியை சிங்களத்திற்கு ஏற் படுத்திவிட்டது. யு.என்.பி காலத் தில் சிங்கள இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்ட சூரியக்கந்தைப் புதைகுழியை மண்வெட்டி கடப் பாரையுடன் சென்று அமைச்சர் களே முன்னின்று தோண்டியது போல் இதனைத் தோண்ட முடி



யாது. ஏனெனில், சந்திரிகாவின் தலைமையில் உள்ள சிங்கள இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலைகள் இவை. லக்ஸ்மன் கதிர்காமர் உலக நாடுகளில் சென்று, உலக நாட்டு இராணுவங்களுக்கு தமது இராணுவம் ஒழுக்க ரீதியாகவும் சண்டைத்திறனிலும் முன்னுதாரணமாக விளங்கக்கூடியது என சேட்டிபிக்கற் வழங்கப்பட்ட இராணுவத்தின் கொலைக்கரங்களில் சிக்கி, புதைக்கப்பட்ட தமிழர்களின் சடலங்கள்.

இதைத் தோண்டினாலும் பிரச்சினை தோண்டாவிட்டாலும் பிரச்சினை. இரு தலைக்கொள்ளி எறும்பாய் சிங்களத்தின் நிலை.

இந்த மாதத்தில் ஒரு துயரமும் இடம்பிடித்துக்கொள்ளுகின்றது. சிங்கள இனவாதப்பேய் அரக்கனின் கைகளில் சிக்கிக் கொள்ளாமல் உயிர்காக்க தமிழகம் சென்ற மக்கள், கடலில் படகு கவிழ்ந்ததில் உயிர் பிரிந்திருக்கின்றனர். ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என 44 பேர் கடலின் மடியில் உயிரிழந்த துக்கத்தில் ஜூலை மாதம் மீண்டும் ஒருமுறை கண்கலங்கிக் கொள்கின்றது.

இந்த மனக் கலக்கங்களுக்கு மத்தியில், துயருக்கு மத்தியில், எங்கே எங்கள் புலி வீரர்கள் வந்து இடியாய் மோதிச் சிங்களத்தை அழிக்க மாட்டார்களா என்று, இந்த மாதம் வழிமேல் விழிவைத்து காத்திருந்த போதும் புலிவீரர்கள் ஏய்த்துவிட்டார்கள் போலும். அது சரி... ஜூலைப் படுகொலையின் அறுவடை, ஜூலையில்தான் நடத்தப்பட வேண்டும் என்பது விதியில்லை என, ஜூலை மாதம் ஆறுதல் அடையவேண்டியதுதான். ஆனால் ..... அந்த அரிய வாய்ப்பு தனக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் ஓகஸ்ட் மாதம் வெகு ஆவலுடன் இடித்து முழங்கிக்கொண்டு பின்னால் வருகின்றது.

★



# மீண்டும் ஐ.நா

தமிழீழ விடுதலைப் போராட்டம் களத்தில் முக்கிய காலகட்டத்தைத் தாண்டிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் புலம் பெயர் தமிழ் மக்களின் பங்களிப்புகளும் பாரியளவில் அதிகரித்து வருகின்றன.

தமிழீழ மக்கள் தமது தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து வந்தாலும் தமது தாயகத்தை மீட்டெடுப்பதில் இன்னும் தமது பங்களிப்பை சகல வழிகளிலும் வழங்கிவருகின்றனர். இந்த வகையில் 10.08.1998 அன்று சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் தமிழீழ மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர்.

சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள் உணர்வுடன்



# ஒருமுறை நோக்கி



ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமான அமைதிப் பேரணி ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலைச் சென்றடைந்ததும் அங்கு விஷேடமாக அமைக்கப்பட்ட மேடையின் முன்புறமாக மக்கள் குழுமினர். பேரணியின் போது தமிழீழத் தேசியக் கொடிகளும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் முழு உருவம் அடங்கிய உருவப்படமும் தமிழ் மக்களால் கொண்டுசெல்லப்பட்டது.

கலந்துகொண்டனர். கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது குழந்தைகள், சிறியவர் பெரியவர் என அனைவரும் திரண்டிருந்தனர்.

எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் எமது தமிழீழ மக்கள் அவற்றை உறுதியுடன் எதிர்கொண்டு போராட்டத்தை மேலும் முன்னே நகர்த்துவர் என்பதற்கு இந்த ஐக்கிய நாடுகள் சபை நோக்கிய அமைதிப் பேரணி ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இப்பேரணியில் தமிழீழ மக்களின் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் மாத்திரமல்லாமல் தமிழகத்திலிருந்து கலந்துகொண்ட தமிழீழ ஆதரவாளர் திரு. சுப.வீரபாண்டியன் உட்பட பல வெளிநாட்டுப் பிரமுகர்களும் கலந்துகொண்டு எமது போராட்டத்திற்கு ஆதரவாக தமது சொற்பொழிவுகளை ஆற்றியிருந்தனர்.




***சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளையும் அழிவு அனர்த்த நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டி தமிழினத்தின் நியாயமான, நீதியான விடுதலைப்போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தியும் ஐக்கிய நாடுகள் சபையிடம் மனு கையளிக்கப்பட்டது.***

சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளையும் அழிவு அனர்த்த நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டி தமிழினத்தின் நியாயமான, நீதியான விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தியும் ஐக்கிய நாடுகள் சபையிடம் மனு கையளிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக வெளிநாடுகளில் நடைபெறும் செயற்பாடுகளுக்கு எதிராக சந்திரிகா அரசு

தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை வெளிப்படுத்துவதற்கு இப் பேரணி ஒரு சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.

இப்பேரணியில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்...." என்ற பாடலுடன் தேசியக் கொடி அமைதியாக இறக்கப்பட்டு, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற கோஷத்துடன் பேரணி நிறைவுபெற்றது.

# தமிழீழத்தின் அழகு! நல்லூர் இராஜதானி



புராதனக் கட்டடம் (சட்டநாதர் கோயில் அருகே)

தமிழீழம் பற்றி இதுவரை எண்ணற்ற வரலாறுகள் எழுதி முடிக்கப்பட்டுவிட்டன. அவையெல்லாம் அப்படியேயிருக்க காலமும் இயற்கையும் தம் கைகளை விரித்து, மண்ணாகவும், கடலாகவும் எழுந்து, நமது வரலாற்றை நீண்டகாலமாகப் பாது காத்து வருகின்றன. தமிழீழ அரசு அமைந்தபின் திறக்கப்போகும் இயற்கையின் இவ்விரு கூப்பிய கரங்களே யாராலும் மறுக்கமுடியாத வரலாற்றை புதிதாக எடுத்துரைக்கவல்லன. அதுவரைக்கும் நமது தேசத்தின் அழகுபற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களினூடாகவே நினைவு மீட்கவேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி கி.பி.13–ம் நூற்றாண்டில் ஆரம்பித்தது. அம்மன்னர்கள் அரசு செலுத்திய முக்கியமான நகர் என்ற பெருமை நல்லூரிற்கு உண்டு. நல்லூர் இராஜதானியின் நகர அமைப்புப்பற்றிச் சேகரிக்க முடிந்த தகவல்களைப் பார்க்கும்போது ஆழமான கலாச்சாரப் பண்புகளுடன், சுதந்திரமாகக் கால்பதித்து நின்ற நாகரிகமான சமுதாயமொன்றை ஐயத்திற்கிடமின்றி அடையாளம்காணமுடிகிறது. நல்லூர் இராஜதானியானது ஆலயங்கள், சந்தை, அரசமாளிகைகள், தொழிலாளர் பகுதிகள், குருக்கள், அரசவைக் கவிஞர், போர்வீரர், வணிகர்களுக்குரிய பகுதிகள், நகரைச் சுற்றியமைந்திருந்த மதில்கள், கோட்டைகள் போன்றவற்றைக் கொண்ட அழகிய


நல்லூர் கந்தசாமி கோயில் பழைய தோற்றம்

நகராக விளங்கியிருக்கிறது. இதன் எழிலை, இந்திரன் நகரோ குபேரன் நகரோ எனக் கண்டார் வியப்புற கனகசூரியன் அமைத்த நகர் என்ற கூறுகிறது யாழ்ப்பாணச் சரித்திரம்.


சிதிலமடைந்த கட்டிடம்

நமது கண்களுக்குள் மாட மாளிகைகளோடு எழுந்து நிற்கும் நல்லூர் இராஜதானி ஆலய நகரத்திற்கும், இராஜதானிக்குமுரிய சிறப்புக்களைக் கொண்டு விளங்கிய நகர். இதை நான்கு முக்கிய கட்டிடத் தொகுதிகளாக அவதானிக்க முடிகிறது. ஒன்று அரசு தெய்வ முக்கியத்துவம் வாய்ந்த வடகிழக்குப் பகுதி, இரண்டு தொழிலாளருக்குரிய தென்கிழக்குப் பகுதி மூன்று புலவர் அந்தணருக்குரிய வடமேற்குப் பகுதி, நான்கு போர் வீரருக்குரிய தென்மேற்குப் பகுதியுமாகும். இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருந்திருக்கின்றன. தகவல்களையெல்லாம் தொகுத்து, மேற்கண்ட அந் நகரத்தை கணணியில் முப்பரிமாண மாக அமைத்து, அரண்மனையின் பிரதான கட்டடத்திலிருந்து நோக்க முற்பட்டாலோ அல்லது ஓவியமாக வரைய முற்பட்டாலோ கிடைக்கும் காட்சிகளின் பெறுபேறுகள் ஏறத்தாழ பின்வருமாறு அமைவுபெறமுடியும்.


நல்லூர் கந்தசாமி கோயில் புதிய தோற்றம்

## முத்திரைச் சந்தை

போத்துக்கேயர்களின் நூல்களில் ஒன்றான Early Christianity in Ceylon நல்லூர் இராஜதானியிலிருந்த சந்தை பற்றிக் கூறும்போது, இச் சந்தையின் நடைமுறைகளை அரசன் தனது மாளிகையிலிருந்து பார்க்கக் கூடியதாகவே அமைக்கப் பட்டிருந்ததாகக் கூறுகிறது. இச் சந்தையில் விற்கப்படும் துணிகள் முத்திரையிடப் பட்டே விற்கப்பட்டதால் முத்திரைச் சந்தையென்று பெயர் வந்திருக்கலாமென் றும் கூறுவர்.


சிதிலமடைந்த கட்டிடம்

## யமுனா ஏரி

தற்போது நல்லூர்ப் பகுதியில் அரிதாகக் காணப் படும் பழமையின் சின்னங்களில் ஒன்று யமுனாரி. இதை தமிழ் மன்னர்கள் நீராடப் பாவித்த கேணியெனச் சிலரும் கூறுவர். முதலியார் இராசநாயகம் தனது ஆய்வில் இதைக்கட்டியவன் சிங்கைப் பரராசசேகரன் என்று தெரிவிப்பார். இக்கேணி பகர வடிவில் அமைந்திருப்பதால் தீர்த்தக்கேணியென்றே எண்ணக்கிடக்கிறது.


யமுனா ஏரியில் கட்டப்பட்டுள்ள துறவுக் கேணி


பண்டாரக் குளம் நல்லூர்

## அழகிய கட்டிடங்கள்

நல்லூர் இராஜதானியை உயர்ந்து நின்ற கட்டிடங்கள் நிரல்பட அமைந்து அழகு செய்கின்றன.

கட்டிடங்களின் முகடுகளில் பறந்துகொண்டிருந்த பொன்மயமான கொடிகள் நகருக்குத் தனியழகு செய்கின்றன. நடுவே ஓடும் இராஜ வீதி, அரண்மனைகள், குதிரைப்படை, யானைப்படைக் கொட்டடைகள், தச்சர், கொல்லர், ஓவியக்காரரெனப் பல்தொழில்களுக்கேற்ற இருப்பிடங்களும் இங்கு அமைந்திருந்தனவென்று யாழ்ப்பாணச் சரித்திரம் உரைக்கிறது.

## சிறுகோட்டைகள்

நல்லூர் இராஜதானிக்குப் பாதுகாப்பாக மூன்று கோட்டைகள் இருந்ததாகவும் போத்துக்கேய நூல்கள் கூறுகின்றன. இவை முறையே கோப்பாய், பண்ணைத்துறை, கொழும்புத்துறை என்பனவாகும். இவை நல்லூர் இராஜதானியுடன் பிரதான வீதியால் இணைக்கப்பட்டிருந்தன. வீதிகள் நெடுக காவல் அரண்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றன.

## முக்கிய பகுதிகள்

முத்திரைச் சந்தைக்கு வட மேற்காக அமைந்துள்ள பகுதி நல்லூர் இராஜதானியின் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சங்கிலித்தோப்பு, சங்கிலியன் வீதி, அரச வீதி, பண்டாரமாளிகை, பண்டாரக்குளம், அரசகேசரி வளவு, குருக்கள் வளவு, அரசவெளி, மந்திரிமனை என்பன நகரின் முக்கியமான பகுதியாகக் காணப்பட்டிருக்கின்றன.

## சங்கிலியன் தோப்பு

தற்போது மந்திரி மனையென அழைக்கப்படும் கட்டிடம் 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்ததாகக் கூறுவர். ஐரோப்பிய திராவிடக் கட்டிடக் கலையின் கூறுகளை இதில் காணலாம். இம் மந்திரி மனையே சங்கிலியன் தோப்பு என அழைக்கப்படுகிறது.

## ஆலயங்கள்

நல்லூர் அரண்மனைக்கும் ஆலயங்களுக்கும் இடையில் ஓர் திட்ட ஒழுங்கு இருப்பதாகத் தெரிகிறது. வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம், நல்லூர் கந்தன் ஆலயம், கைலாசநாதர் ஆலயம், சட்டநாதர் ஆலயம் , வீரமாகாளியம்மன் ஆலயங்களின் அமைவை நோக்கின் இவ்விதமாகவே காட்சிப்படுத்த முடிகிறது. மேற்கண்ட ஆலயங்கள் எழுப்பும் மணியோசைகள் நகரைத் துயிலெழுப்பும் காட்சி மனதிற்கு ரம்மியமாயிருந்திருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. மேற்கண்ட ஒழுங்கமைப்புக்களை நமது எண்ணத் திரையில் ஒழுங்காக ஒவ்வொன்றாக அடுக்கிச் சென்றால் அங்கே ஓர் அழகான நகரமும் அரசும், தன்மானத் தமிழினத்தின் ஆனந்தமான வாழ்வும், காட்சிகளாக விரிவதைக் காணமுடியும். இந்த அழகைத்தான் இந்திரன் நகரோ, குபேரன் நகரோ என்று போற்றிப் புகழ்ந்திருக்கிறது யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூல். இது போலவே தமிழீழ அரசு தன் பழைய பெருமையையும், பொலிவையும் மீண்டும் பெறவேண்டுமென்பதும் உலகத் தமிழினத்தின் உன்னத எண்ணங்களாகுமென்பதை யார் மறுப்பார்.

ஆதார நூல்
நல்லூர் இராஜதானி நகர அமைப்பு
வ.ந.கிரிதரன்

---

## உலகின் நீளமான மினிறோவர்!
## திரைப்படத்திற்காகத் தயாராகியிருக்கிறது.



இரண்டு சிறிய கார்களை வெட்டி 11 மீட்டர் நீளமான இந்தக் கார் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் பீன் திரைப்படத்திற்காக இங்கிலாந்தைச் சேர்ந்த பிராங், டங்கன் ஆகிய இருவரும் இதைத் தயாரித்திருக்கிறார்கள். இரண்டு மினி றோவர் கார்களை பிளாஸ்டிக் நாரினால் இழைத்து வடிவமைத்துள்ளனர். திரைப்படங்களில் இக்கார் வரும்போது ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்துவிடும். அதுவும் மிஸ்டர் பீன் ஓடி வந்தால் சிரிப்பு இரட்டிப்பாக இருக்கும் என்கிறார்கள். இருவரும் இதை இரண்டு லட்சம் பிராங்கிற்கு விற்பனை செய்துள்ளனர்.





# கணணியையும் இணைவலையையும்



## வீட்டிற்குள் கொண்டுவந்த விஞ்ஞானி; டக்ளஸ் இங்கிள்பாட்



மனித மூளையின் கொள்ளளவு ஆரம்பத்தில் 300 க.செ.மீ. அளவே இருந்தது. இப்போதோ அது 1400 க.செ.மீ. அளவாக அதிகரித்துள்ளது. மனித மூளையில் ஏற்பட்ட இத்தகைய வளர்ச்சியே மனிதன் என்னும் வடிவத்தை அழிந்துபோகவிடாது பூமிப்பந்தில் பாதுகாத்து வைத்திருக்கிறதெனலாம். ஆனால் நமது தேவைக்கு இது மட்டும் போதியதல்ல. எவ்விதமாயினும் மனித மூளையின் கொள்ளளவை நாம் மேலும் அதிகரித்தாக வேண்டும். ஏனெனில் இதுவரை கற்பனையாகவே பேசப்பட்ட சிகரங்களையெல்லாம் மனிதன் நிஜமாகவே எட்டிப்பிடித்தாக வேண்டும். இதற்கு யாது வழி? இணைவலை (INTER NET) கண்டுபிடிக்கப்பட வேண்டும், மென்பொருள் (SOFT WARE) அறிமுகமாதல், தொலைவில் இருக்கும் ஒருவரின் படத்தையும் உரையாடலையும் இங்கிருந்தே பார்த்து உரையாடுவது, மனித மூளையில் அடக்கமுடியாத கோடிக்கணக்கான தகவல்களைச் சேகரித்து வைத்தல் போன்ற காரியங்களை நடைமுறைப்படுத்தும் வழிவகைகளைக் கண்டுபிடித்துவிட்டால் நமது கற்பனைகளில் பலதை நிஜமாக்கிவிடலாம். இதற்காக உழைத்து, வெற்றி பெற்றவரே விஞ்ஞானி டக்ளஸ் கார்ள் இங்கிள்பாட். "கணணி மூலம் இன்று நாம் எதைத்தான் செய்ய முடியாதென" இறுமாப்படையும் மனிதர்களுக்கு அத்தகைய நம்பிக்கையை தரக் காரணமாயிருந்ததே அவரது கண்டுபிடிப்புகளாகும்.

1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள பல்கலைக்கழக கட்டிடமொன்றில் இருக்கிறோம். ஆயிரத்திற்கு மேற்பட்ட இருக்கைகள் கொண்ட அம்மண்டபம் விஞ்ஞானிகளாலும், அறிவாளிகளாலும் நிறைந்து கிடக்கிறது. விஞ்ஞானி டீ.சி இங்கிள்பாட் தனது கண்டுபிடிப்பை எடுத்துரைக்க அந்த மண்டபத்தில் தயாராக இருக்கிறார். பெரும் நிசப்தம் நிலவுகிறது. மண்டபத்தின் முன்னால் ஓர் வெண்மையான திரைச்சீலை விழுந்து கிடக்கிறது. அதன் முன்னால் ஒருவர் கணணிக்குரிய விசைப்பலகையையும் (KEY BORD) அருகில் மூஸ் (MUS) என்னும் சிறு கருவியையும் வைத்திருக்கிறார். (இது அப்போது மரத்தினாலேயே செய்யப்பட்டிருந்தது) ஏராளமான வயர்கள் கற்றை கற்றையாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஒருவர் கீபோட்டையும், மர மூஸையும் இயக்குகிறார் சட்டென ஓர் உருவம் திரையில் தோன்றுகிறது. அவ்வுருவத்திற்குரிய மனிதன் பல கி.மீ.தொலைவில் இருந்து கதைக்கிறார். அதை அனைவரும் பார்க்கின்றனர். மகிழ்வுடன் எழுந்து நின்று கைதட்டுகின்றனர். இன்று நாம் தொலைக்காட்சிகளில் பார்க்கும்போது ஒவ்வொரு நாட்டுச் செய்தியாளரும்

வேறுவேறு இடங்களிலிருந்து கதைப்பதைப் பார்க்கிறோமே அப்படிப்பட்டதோர் காட்சியே அந்தச் சபையில் அன்று அரங்கேறியது. இதுவே உலகத்தின் முதலாவது "MULTI MEDIE SHOW" என்று அழைக்கப்படுகிறது. இதை நிறைவேற்றுவதற்காக பல இரவுகள் உண்ணாது, உறங்காது முயற்சியெடுத்தார் இங்கிள் பாட்.

இம் முயற்சியோ மிகக் கடினமானதாகவும், தனியாகவே செய்ய வேண்டியதாகவும் இருந்தது. இதில் ஈடுபட்டபோது இவரை அனைவருமே முட்டாளாகவே கருதினர். இப்பணியின் கடுமையை உணர்ந்தவர் இவரைக் கண்டாலே ஓடி ஒழிந்தனர். ஆனால் இங்கிள் பாட்டோ கடுகளவும் சளைக்கவில்லை தொடர்ந்து முயற்சித்தார். இவர் முயற்சிக்குரிய காரணத்தை அறிய வேண்டுமானால் அவருடைய வாழ்வில் நடந்த சில சம்பவங்களை அறிதல் அவசியம்.

1925–ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள போட்லாண்டில் இவர் பிறந்தார். இளம் வயதிலேயே அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து, அங்கு ராடர் தொழில் நுட்பவியலாளராக பணியாற்றிவந்தார். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்தபோது இவர் அமெரிக்க இராணுவத்துடன் பிலிப்பைன்ஸ்சில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். யுத்தம் முடிவடைந்து அமெரிக்கா புறப்படும் தருணத்தில் ஓர் நாள் அங்கிருந்த செஞ்சிலுவைச் சங்க நூல் நிலையத்திற்குச் சென்றிருந்தார். அங்கிருந்த பத்திரிகையொன்றில் அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர் வானிவர் புஸ் ஓர் கட்டுரையை எழுதியிருந்தார். அதன் தலைப்பு, "இப்படித்தான் நாம் யோசிக்க வேண்டும்!" இக் கட்டுரையில் உள்ள விடயமென்னவென்றால் உலக யுத்தத்தால் நாடுகளெல்லாமே பேரழிவைச் சந்தித்துவிட்டன. இத்தகைய பின்னடைவிலிருந்து விடுபட வேண்டுமானால் அனைத்து நாடுகளுமே தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் அறிவைப் பெற வேண்டும். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அந்தத் தேவைகளை நூல் நிலையங்களால் தீர்த்துவிட முடியாது. தகவல்களைச் சேகரிக்கவும், உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் புதிய கருவி உருவாக்கப்பட வேண்டுமென அக் கட்டுரை கேட்டிருந்தது. இதை வாசித்தவுடன் இங்கிள் பாட் இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அந்நேரம் அவருக்கு இளமை ஊஞ்சலாடும் வயது. இளம் அமெரிக்கப் போர் வீரர்களைப் போலவே, அவரும் மூன்று விடயங்களே மிகப் பெரியவை என நினைத்திருந்தார். படிப்பு, வேலை, திருமணம் இந்த மூன்றையும் தேடி அவர் அமெரிக்காவிற்கு ஓடினார்.





1948–ல் இலத்திரனியல் பொறியியலாளராகப் பட்டம் பெற்றார். 'நாசா' வில் ஓர் வேலை கிடைத்தது. 1950–ல் இவருடன் வேலை செய்யும் ஓர் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். முன்னர் இவை மூன்றையுமே பெரிய விடயங்களாக நினைத்திருந்தார். ஆனால் அவை அனைத்துமே மிக மிகச் சொற்ப காலத்தில் நிறைவேறிவிட்டன. இனி மிகுதியாக உள்ள வாழ்நாளில் என்னதான் செய்வதென யோசித்தார். அப்பொழுதே அவர் ஓர் அரிய உண்மையையும் அறிந்திருந்தார். வாழ்க்கையென்பது வருடங்களை எண்ணி வாழப்படுவதல்ல. ஒவ்வொரு நிமிடங்களாக எண்ணியெண்ணி வாழப்படுவதாகும் என்பதே அது. எனவேதான் 60 வயதுவரை வேலைசெய்தால் தனது வேலை நேரம்போக மிகுதியாக கிடைக்கும் நேரத்தைக் கூட்டினால் 5.5 மில்லியன் நிமிடங்கள் ஓய்வு கிடைக்குமென அறிந்துகொண்டார். அந்த நிமிடங்களில் மனித குலத்திற்குப் பயன் தரக்கூடிய எதையாவது செய்தேயாகவேண்டுமென நினைத்தார்.

பணம், பொன், ஆடம்பர வாழ்வு எதிலுமே அவர் மனம் நாட்டம் கொள்ளவில்லை. அப்போதுதான் முன்பொருநாள் பிலிப்பைன்சில் வாசித்த கட்டுரை மறுபடியும் நினைவிற்குள் வந்தது. அவ் வேண்டுதலை எப்படி நிறைவேற்றலாமென நினைத்தார். இவரிடம் அதற்காக இரண்டு சாதகமான திறமைகள் இருந்தன. ஒன்று கணணி பற்றித் தெரிந்திருந்தது, இரண்டு ராடர் பற்றி நிறைந்த அறிவிருந்தது. எனவே இவ்விரு ஆற்றலையும் கலந்து தனது எண்ணத்தை ஈடேற்ற முயன்றார். அக்காலத்தில் ஓர் கணணி இரண்டு அறையளவு பெரியதாக இருந்தது. அதைத்



தொடுவதென்றாலே நிறையப் படிக்க வேண்டியிருந்தது. கேள்வி கேட்டு ஓர் கடதாசியைத் தள்ளினால் கணணி விடைதரும். இது மிகச் சிரமமான செயற்பாட்டு முறை. முதலில் இதை இலகுவாக்க வேண்டும். சாதாரண மனிதனுக்குக் கிட்டவரும் எளிய பாவனைப் பொருளாக கணணியைக் கொண்டு வர வேண்டும். அதற்காகவே கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகப் படித்து மேலுமொரு பட்டம் பெற்றார்.

படித்து முடிந்தவுடன் கணணிக்கு ஓர் படக்காட்டி(SCREEN) எழுத்துக்களைக் கொண்ட ஓர் விசைப்பலகை (KEY BORD) ஆகியவற்றைத் தயாரிக்கப் போவதாகக் கூறியதும் அனைவரும் “கொல்” லெனச் சிரித்தனர். இதே கருத்தை ஸ்ரான் போட் ஆராட்சி நிலையத்திலும் எடுத்துரைத்தார். எவருமே செவிசாய்க்கவில்லை. இறுதியாக தான் முன்னர் வேலை செய்த அமெரிக்க இராணுவத் திணைக்களத்திற்கு விபரமாகக் கடிதமெழுதினார். அவர்களுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. 40 உதவியாளரையும் அதற்கான நிதியையும் ஒதுக்கிக் கொடுத்தனர். அதைக் கொண்டு “ON LINE SYSTERM” என்னும் திட்ட அமைப்பை ஆரம்பிக்கிறார். இப்போது நாம் இணைவலையில் (INTER NET) கதைப்பது போன்ற காரியங்களைச் செய்கிறோமே இதனை ‘NLS’ முறை என்று குறிப்பிடுவார்கள். தகவல் தேடுவது முதல் கடிதமெழுதுவது வரை இதைப் பாவிக்கலாம். இதற்கு வழி வகுத்ததே இந்தத் திட்டம்தான். இக்காலத்திலேயே அதிகமான மென் முறைகளை (SOFT WARE) கண்டுபிடித்தார். எழுத்து முறைகளில் கூட சில சிக்கல்களும் இருக்கத்தான் செய்தன. எழுதுவது வேறு ஒரு (PROGRAM) பகுதிக்குப் போவதெல்லாம் முடியாதிருந்தது. கடுமையாக யோசித்தார். முன்னர் கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் படித்தபோது அளவெடுக்க மரத்தினால் செய்யப்பட்ட ஓர் சிறிய நாலு சில்லு வண்டியைப் பயன்படுத்தினார்கள் இப்போது அது நினைவிற்கு வரவே அதனடிப்படையில் இன்று நாம் பாவிக்கும் மூஸ் (MUS) ஐ கண்டுபிடித்தார்.

இப்போது இங்கிள் பாட்டின் எண்ணம் முற்றாக ஈடேறிவிட்டது. அவைகளையே அவர் நாம் முன்னர் கூறியதுபோல 1968–ம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ மண்டபத்தில் நிறைவேற்றிக் காட்டினார். ஆனால் இவைகளை வைத்து இவரே கணணியைக் கண்டுபிடித்தவரெனக் கூறிவிடலாகாது. அதை நவீனமயப்படுத்தி, மக்கள் அரங்கிற்கு கொண்டுவந்தவர் என்றளவிலேயே இவரை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் உங்களிடமுள்ள கணணி அப்பிளோ அல்லது சாதாரண பிரத்தியேக கணணியோ எதுவானாலும் அதை உங்கள் வீட்டிற்குள் கொண்டுவர உதவியவர் இவரே என்பதை மட்டும் மறந்துவிடலாகாது. 40 வருடங்களாக இவர் பட்ட பாட்டிற்காக 1997–ல் அமெரிக்காவிலேயே உயர் விருதான ‘MIT’ விருதும் பரிசும் கிடைத்தது. மற்றவர்களைப் போல இவரும் தனது சிந்தனைகளை உடனுக்குடன் செயல்படுத்தாமல் வைத்திருந்தமையால் பெரும் பணம் உழைக்க முடியாமல் போய் விட்டது. எனினும் தனது 25 வயதில் 5.5 மில்லியன் நிமிடங்கள் ஓய்வு கிடைக்குமெனக் கணக்கிட்ட இங்கிள்பாட் தற்போது 2 மில்லியன் நிமிடங்கள் அதிகமாக வாழ்ந்து, இன்றும்கூட “பூற்ஸ்ராப்” என்ற அறிவியல் நிலையத்தில் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். இப்போது 73 வயதை அடைந்துவிட்ட இவரின் வாழ்வு நமக்கு அரியதோர் பாடமாகும்.

**சிவாஸ்**

# தேடலும்

## விவாத அரங்கு



**"பிள்ளையாருக்கு யானைமுகம்.
அவரைக் கும்பிட்டால், உங்கள் முகமும் யானை முகமாய்மாறும்"
"முருகனுக்கு இரண்டு பெண்சாதிகள்.
அவரைக் கும்பிட்டால், உங்கள் கணவரும் இரண்டு பெண்சாதிக்காரர் ஆகிவிடுவார்"
"சிவனுக்கு நெற்றிக் கண்.
அவரைக் கும்பிட்டால், உங்கள் முகத்திலும் மூன்றாவது கண் வந்துவிடும்."**

"ஹா.....ஹா.......ஹா...." என்று ஒரு கேலிச் சிரிப்புடன் "இப்படிப்பட்ட கடவுள்களை நீங்கள் கும்பிட்டு, உங்கள் வாழ்க்கையை சீரழிக்க விரும்புகிறீர்களா?" என்று சொல்லி முடித்தார் அம் மனிதன்.

சிறுகதை வசனம் அல்லது சினிமா 'டயலாக்' என்று யோசிக்கிறீர்களா? இல்லவே இல்லை. மதப் பிரச்சாரத்துக்காக வீடுகளுக்கு விஜயம் செய்பவர்களால் சொல்லப்பட்டு நான் என் காதால் கேட்ட சில வாசகங்களே இவைகள். அண்மைக் காலங்களில் புலம்பெயர் நாடுகளில் மிகத் தீவிரமாக நடந்து வரும் மதமாற்றங்கள் பற்றின ஒரு கண்ணோட்டத்தை இம்முறை விவாத மேடைக்குக் கொண்டு வருகிறேன்.

குறிப்பிட்ட ஒரு மதக் கொள்கைகள் மீது நம்பிக்கை வைப்பதும் வைக்காமல் விடுவதும், மதம் மாறுவதும் எல்லாமே தனி மனித சுதந்திரம் என்பதை நான் முழு மனதாக ஏற்றுக் கொள்கிறேன். அதே சமயம் மதம் என்ற பெயரால் மனித மனங்களில் எழும் பிரிவினை வாதங்களை....., மதத்தின் பெயரால் மனிதன் மிருகமாகிக் கொண்டிருக்கும் போக்கினை, நான் வெறுக்கிறேன். அனைத்து மதங்களும் கூறும் அன்பு, நேசம், கருணை என்ற அடிப்படைத் தத்துவங்களை மறந்து, 'மதம்' பிடித்து அலைவோரை....... மதஸ்தாபனங்கள் மனித ஒற்றுமைக்காக பாடுபடுவதை விடுத்து, மனிதர்களுக்கிடையே பகைமையை வளர்ப்பனவாய் செயற்படுகிற முறையைக் கடுமையாக கண்டிக்கிறேன்.

மனிதனை யதார்த்த உலகினின்றும் பிரித்து, வாழ்க்கைக்கு ஒவ்வா விளக்கங்கள் மூலம் மதப் பிரச்சாரம் செயவோரை சுயசிந்தனையுள்ள மனிதர்கள் விமர்சிக்கவே முற்படுவார்கள். ஒருவனுக்கு மதம் என்பது தேவையா? மதக் கொள்கைகள் சொல்லும் கதைகள் எல்லாம் உண்மையா? என்றெல்லாம் பல கேள்விகள், சந்தேகங்கள் எழுந்து, விடை காண முடியாமல் தவிக்கும் இக்கால கட்டத்தில் மதப் பிரச்சாரம் என்ற புதியதோர் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் மதப் பிரச்சாரத்துக்காக மதஸ்தாபனங்கள் பல இலட்சம் ரூபாய்களை செலவழிக்கின்றன. வீடு வீடாய்ச் சென்று, பல உத்திமுறைகளைக் கையாண்டு, தங்கள் மதக் கொள்கைகளைப் பரப்புவதற்காய் பல இலட்சங்கள் செலவழிக்கப்படுகின்றன. மதப் பிரச்சாரம் செய்வோரால் கையாளப்படும் உத்திமுறைகளில் மிகக் கேவலமானது என்னவெனில், மற்றைய மதக் கொள்கைகளைக் கேலி செய்வது. மனிதன் ஒழுக்கமுள்ளவனாய் தனக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் பிரயோசனமுள்ளவனாய் வாழ வேண்டும். இதற்கான பல வழிவகைகளை எவ்வளவு விளக்கமாய் எல்லா மதக் கொள்கைகளும் சொல்லியிருக்கின்றன? அவற்றைப் பற்றி அதாவது மனிதன் 'மனிதம்' உள்ளவனாய் வாழும் முறைமையைப் பற்றி பிரச்சாரம் செய்யலாமே! "நீ மற்ற மதங்களைக் கேலி செய்வாயாக" என்று எந்த வேத வாக்கியம் சொல்கிறது?

மல்லீஸ்வரி ஆதவன்

# தெளிவும்

தாய் மண்ணைப் பிரிந்து, உற்றார் உறவினரைப் பிரிந்து, எமக்கென பற்றுக்கோடற்ற நிலையில் அன்றாடம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எதிர்காலம் பற்றின பயம், வாழ்க்கை பற்றின சந்தேகம் எங்கள் எல்லோர் மனங்களிலும் ஆழப்பதிந்துள்ளது. இவற்றைப் போக்குவதற்கான வழிவகைகளைப் பற்றி இவர்கள் பிரச்சாரம் செய்யலாமே!

அதைவிடுத்து "எங்கள் மதத்தைச் சேர்த்தவர்களைத் தவிர மற்றவர்கள் சாத்தான்கள். இவர்கள் நரகத்துக்கே போவார்கள்" "2000–ம் ஆண்டு உலகம் அழியும். அப்படி அழிகையில் எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே மிஞ்சுவர். ஏனைய எல்லா உயிரினங்களும் அழிந்துவிடும் என்று இன்னும் பயமுறுத்தி, மனிதனைப் பலவீனமாக்கிக் கொண்டிருக்கும் பொய்ப்பிரச்சாரங்களை நேர்மையான தெளிந்த சிந்தனையுள்ள எந்த ஆன்மீக வாதியும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

அடுத்ததாக மதம் மாறிக் கொண்டிருப்போரின் நடைமுறை வாழ்க்கையை எடுத்துப் பார்ப்போம். இவர்கள் எதையோ எங்கேயோ பறிகொடுத்தவர்கள் போல் இருப்பதை அவதானிக்கலாம். ஆத்ம பலமற்றோராய், கண்முன் இருக்கும் வாழ்வை அலட்சியம் செய்துவிட்டு, மரணத்தின் பின் உள்ள வாழ்வைப் பற்றி சிந்திக்கும் மூட நிலைக்கு தள்ளப்பட்டோராய் இருப்பதைக் காணலாம். இங்கு மதம் மாறியோர் பலரைப் பார்த்திருக்கிறேன். இவர்கள் எங்காகிலும் மற்றைய மதத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போவதும், முறைத்துப் பார்ப்பதையும் அவதானித்திருக்கிறேன். தமக்குள் குழுக்களாய்ச் சேர்ந்து தங்கள் மதத்துடன் சம்பந்தமற்ற வேறு ஒன்றிலும் தம்மை இணைத்துக் கொள்ளாமல் குறுகிய வட்டத்துள் தம்மை அடக்கிக் கொண்டிருக்கும் நிலை மிகவும் கவலைக்குரியது.

எமக்கென ஒரு நாடு வேண்டும், அதற்கான உரிமைப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழனும் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற குரல் உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இக் குரலுக்கு பங்கம் விளைவிக்கு முகமாக வரும் எந்தவொரு எதிர்க் குரலையும் நாம் இணைந்து தடுத்து இனத்தைக் காக்க வேண்டியது தமிழர்களாகிய எமது கடமை. இந் நிலையில் எமக்குள் பிரிவினவாதங்களை ஏற்படுத்தும், தமிழர்கள் மனநிலையைத் திசைதிருப்ப முயலும் மதப் பிரச்சாரங்களை நாம் ஒன்று கூடி எதிர்ப்பது அவசியம்.

# புத்திசாலிகள்

'பாரில்' நன்றாகக் குடித்துவிட்டு நள்ளிரவில் வீட்டுக்குக் காரில் திரும்பிக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு திடீரென்று ஒரு சந்தேகம். ஒருத்தன் இன்னொருத்தனிடம் கேட்டான்- ஆமா, பாரில் டேபிள் மேல் 'கார் சாவியை" வைத்திருந்தேனே, எடுத்தாயா?

இல்லையே...!

அடக் கடவுளே... இப்ப கார் சாவிக்கு என்ன பண்றது?

சரி! திருப்பு... பாருக்குப் போவோம்.

கார் திரும்பியது. இரண்டு பேரும் குடிக்கும் இடத்துக்குப் போய் சல்லடை போட்டு அலசினார்கள். பார்மேனை விரட்டினார்கள். ஊஹூம்.... எங்கேயும் சாவி கிடைத்தபாடில்லை.

திரும்பவும் ஆளுக்கு ரெண்டு லார்ஜ் ஊற்றிவிட்டு, காருக்கு திரும்பினார்கள் சோகமாக. கதவைத் திறந்து பார்த்த முதல் இளைஞன் இன்ப அதிர்ச்சியில் கத்தினான்-

அட, இதப் பார்ரா... சாவியை! வண்டிலதான் தொங்குது சனியன்!

அட... ஆமா. சரி, கையில எடுத்து பத்திரமா வச்சுக்கோ. இனிமே இப்படி எங்கேயும் ஞாபகமறதியா வச்சுடக்கூடாது.

தங்களது ஞாபகமறதியை மெச்சியபடி ரெண்டு பேரும் கார் சாவியைக் கையில் பிடித்துக்கொண்டு நடந்தே போனார்கள்- காரை மறந்துவிட்டு.......

கரடிக்குளம்
ஜெயா பாரதிப்ரியா
இந்தியா

## சுவிற்சர்லாந்தில்

# மாணவர் எழுச்சிநாளும் விளக்கு சஞ்சிகை வெளியீடும்!


சுவிற்சர்லாந்து நாட்டின் இயற்கை வனப்பைச் சொல்ல முற்படுவோர் அதற்கு எத்தகைய மொழி நடையைக் கையாழ்வதெனத் தெரியாது தடுமாறாவிட்டால் அவர்களின் இரசனையில் பிழையிருப்பதாகக் கூறுவதில் தவறில்லை. அங்கு நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாளைக் காணச் சென்றபோது இப்படியொரு உணர்வுதான் மனதில் தோன்றியது. எல்லோரும் தேடியோடுகிறார்களே என்றளவிற்குள் மட்டும் அங்கு இயற்கையின் அழகு பொருந்தி வந்திருப்பதாகக் கூறிவிட முடியவில்லை. அதற்கும் அப்பால் ஓர் அமைதியின் சமநிலை இயற்கையின் மொழியால் வரைவுபடுத்தப்பட்டிருப்பது தெரிந்தது. பச்சைப்பசேலென்ற புல்வெளிகள், ஒன்றன்பின் ஒன்றாக எட்டிப் பார்த்து நலம் விசாரிக்கும் மலைத் தொடர்கள், பனிமுடி தரித்த சிகரங்கள், நீர்வீழ்ச்சிகள், மலை ஏரிகள், போட்டிபோட்டுப் பூக்கும் பூக்களென யாவுமே இயற்கைச் சிற்பியின் இறுதி வெளியீடென மொழிவதாயிருந்தது. புதைந்து கிடக்கும் கலைத்துவத்தை தமிழ்க் கண்களால் பார்ப்பதும்; புதிதான ஓர் தமிழில் சொல்வதும் 'சுகம்' என்று தெரிந்தது.

அழகான சூரிச் நகரில் இறங்கிய போதே தமிழீழ மாணவர் எழுச்சி நாள் வரவேற்றது. அதிகமான எண்ணிக்கையில் மக்கள் நிறைந்திருக்காவிட்டாலும் வந்திருந்த அனைவருமே ஆர்வமுள்ளவர்களாக இருந்தமை மேலதிகத் திருப்தியாக இருந்தது. மாணவரின் தொகுத் தளிப்பு, தாளலய நாடகம், வயலின் இசைக்கச்சேரி, பாடல்களுக்கு அபிநயம், மெல்லிசைப் பாடல்களெனத் தொடர்ந்தன நிகழ்வுகள். இறுதியில் மாணவரின் தயாரிப்பான, "விளக்கு" என்னும் காலாண்டுச் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. அழிவிலிருந்து நம்மைக் காப்பது அறிவு என்ற தேசியத் தலைவரின் உரையை ஆரம்பத்திலேயே சேர்த்திருந்தார்கள். தமிழீழத்திலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் கல்வியியல் தொடர்பாக கிடைக்கக்கூடிய அனுபவங்களைத் திரட்டி, புதிய புதிய ஆக்கங்களுடன் நிரல்படக் கோர்த்திருந்தார்கள். உலகின் நீர்த்துப்போன பழைய




கட்டமைவுகளையெல்லாம் மாணவர் எழுச்சிகளே தகர்த்துக் கொண்டிருப்பதால் புலம் பெயர் நாடுகளில் நடைபெறும் மாணவர் எழுச்சிகளும் முக்கியமான கணிப்புப்பெற வேண்டியது அவசிய மெனத் தெரிந்தது.

## உலகத்தின் சின்னஞ்சிறிய நாய்க்குட்டி



இங்கே நீங்கள் காணும் நாயின் இனம் "HALF PINJ" என்று அழைக்கப்படுகிறது. தாய்லாந்தைச் சேர்ந்த வில்லிவான் என்ற வியாபாரியிடம் இந்த இன நாய்கள் உண்டு. ஒரு கண்ணாடிக் கிளாசிற்குள் இவைகளை அடக்கிவிடலாம்.

# கறுப்பு ஜூலையும் சில கற்கைகளும்

"அப்பாவிகளாகவும், கண்ணீர் விடுவோராகவும் எப்போதும் இருப்பவரே தமிழர்" என்று பேரினவாதம் வைத்துக்கொண்ட கணிப்பீடுகளே ஜூலைப் படுகொலைகளை நிகழ்த்தும் துணிவை வழங்கிய பிரதான காரணமென்பதும் மறுக்கமுடியாததாகும்.

கறுப்பு ஜூலையின் பதினைந்தாவது நினைவு மிகப் பெருமளவில் உலகமெல்லாம் நினைவு கூரப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் மனங்களில் அது ஆற்றமுடியாத காயமாகிவிட்டதை எடுத்துரைத்தன அவ்வுணர்வலைகள். எனினும் "அப்பாவிகளாகவும், கண்ணீர் விடுவோராகவும் எப்போதும் இருப்பவரே தமிழர்" என்று பேரினவாதம் வைத்துக் கொண்ட கணிப்பீடுகளே ஜூலைப் படுகொலைகளை நிகழ்த்தும் துணிவை வழங்கிய பிரதான காரணமென்பதும் மறுக்கமுடியாததாகும்.

★ கல்வியை வாழ்க்கையின் உயர்ந்த விழுமியமாகப் போற்றியது ஈழத்தமிழினம். பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர் போன்றவையே தமிழரின் இலக்குகளாக இருந்தன. இவை தமது வாழ்வைக் காக்குமென முழுமையாக நம்பினர். ஆனால் கொழும்பு வீதிகளில் உயிர் உடமைகள் யாவும் சூறையாடப்பட்டபோது கற்ற கல்வியால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது போயிற்று. தேசிய பாதுகாப்பு சேர்க்கப்படாத ஓர் கல்வித் திட்டத்தால் நம்மைப் பாதுகாக்க முடியாது என்ற உண்மை அன்றே தெளிவாகியது.

★ தமிழ் மக்களுக்கு அகிம்சை அரசியல் ஏற்புடையதல்ல என்னும் உண்மையும் அன்றுதான் நிதர்சனமாகியது. *1956*–லேயே தமிழினம் தன்னைக் காத்தற் பொருட்டு அறிமுகம் செய்திருக்க வேண்டிய இனப்பாதுகாப்பு நடவடிக்கைகளை இனியும் அறிமுகம் செய்யாதிருக்க முடியாததென்ற நிலைக்கும் தள்ளப்பட்டது. அத்தோடு போராட்டமும் பெரும் தீவிரம் பெற்றது.

ஜூலைக் கலவரம் நடைபெற்றது ஓரிருவாரங்கள் ஆனால் இன்று கொழும்பு வீதிகளில் நடமாடும் தமிழருக்கு ஜூலைக்கலவர உணர்வு தினசரி வாழ்வாயிருக்கிறது.

★ நாம் அகிம்சையைக் கடைப்பிடித்தாலே போதுமானது. அநீதி விழைந்தால் உலக நாடுகள் பார்த்துக்கொண்டிருக்காதென நிறையப் பேர் நம்பினர்; ஆனால் ஜூலைப் படுகொலையோ, ருவாண்டா படுகொலையோ எதுவானாலும் உலக நாடுகளுக்கு அவையாவும் வெறும் கற்கைகளே! உண்மையில் நமது விடிவிற்கு நாமே பொறுப்பு என்ற தெளிவு பலரிடம் பிறக்க அது வழிவகுத்தது.

★ பேரினவாதிகள் *1956*–ல் இருந்து வருடா வருடம் இனக் கலவரங்களையே ஆயுதமாக்கிவந்தனர். ஆனால் ஜூலைக் கலவரத்தின் பின் அது பாவிக்க முடியாத ஆயுதமாகிப் போய் பதினைந்து ஆண்டுகளாகியிருக்கிறது.

ஜூலைக் கலவரம் நடைபெற்றது ஓரிரு வாரங்கள் ஆனால் இன்று கொழும்பு வீதிகளில் நடமாடும் தமிழருக்கு ஜூலைக் கலவர உணர்வு தினசரி வாழ்வாயிருக்கிறது. இது பொருத்தமானதல்ல. இத்தகைய ஒடுக்கு முறையைக் கடப்பதே ஒரு இனத்தின் நின்மதிக்கும் விடிவிற்கும் அடிப்படையாகும். இதுவே இன்றைய தமிழினத்தின் கோசமாக மாறியுள்ளமைக்கு ஜூலைக் கலவரங்கள் தந்த பாடமே அடிப்படைத் தூண்டுதலெனவும் கூறுலாம். ▼

# சித்தர் தத்துவம்





தமிழ் நாட்டு வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் சித்தர்கள் மேன்மையான இடம் பெறத் தக்கவர்கள். மருத்துவம், மந்திரம், ரசவாதம், யோகம், ஞானம் முதலிய பல்வேறு துறைகளில் பாடல்களை இயற்றித் தந்தவர்கள். நாடி, நரம்பு, குருதியோட்டம், உறுப்பு நலன்கள் முதலியவற்றின் அடிப்படைகளை எடுத்துரைத்தவர்கள். சாதி, சமயம், மதம், முதலியவற்றில் வேகமாக வீழந்து மோதிப் பிரியும் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தப் பாடுபடுபவர்கள். சடங்கு, சம்பிரதாயங்கள், உருவவழிபாடு போன்றவற்றை மறுத்திருந்தாலும்கூட அவர்களை நாத்திக வாதிகளென்றோ கடவுள் மறுப்பாளர்கள் என்றோ வரையறை செய்யமுடியவில்லை.

## சித்தர் என்றால் யார்?

“பக்தி நெறியன்றி, வேறு நெறியால் கடவுளைக் கண்டு, தெளிந்து இருவினையொப்பு நிகழுங்காறும் உடலோடு உலாவுவோர்!” என்று சித்தர்களை வரையறை செய்வார்கள். தத்துவங்கள் கழன்று விட்டால் சித்தம் அலையற்ற நீர் போலத் தெளிவாக இருக்கும். இதுவரை கண்ட காட்சிகளும், அதிர்வுகளும் இல்லாமல் போய் விட பேரானந்தம் பெருக்கெடுக்கும். சித்தர்கள் இப் பேரானந்தத்தைச் சுவைப்பவர்கள். நமது உடலும், உலகியல் தத்துவங்களும் ஆன்மப் பயணத்திற்குத் துணை பயக்குமாறு இறைவனால் படைக்கப்பட்டவை. அவற்றை முறையாகப் பயன்படுத்தி ஒவ்வொரு மனிதனும் வீடு பேறடைய வேண்டுமென்பதே சித்தர்களின் எண்ணம். உண்மையாக உலகியல் புரட்சிக்கும், ஆன்மீகப் புரட்சிக்கும் ஒரு பெரிய வேறுபாடுண்டு. பங்கேற்றுச் செயற்படாதவருக்கும் உலகியல் புரட்சியால் பயன்கிடைக்க வாய்ப்புண்டு; ஆனால் ஆன்மீகப் புரட்சியில் ஈடுபடாத எவருக்கும் ஆன்மப்பயன் கிட்டவேகிட்டாது. எனவேதான் நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? ஏன் பிறந்தேன்? துன்பம் ஏன் தொடர்ந்து வருகிறது? இன்பம் நிலைத்திருக்கக் கூடாதா? ஏன் இவ்வுலகமானது நமக்கு எப்போதுமே நிறைவின்றித் தெரிகிறது? போன்ற கேள்விகளுக்கு உலகியல் நிலையிலிருந்து விடைகாண முடியாத நிலையில் தன்னுள் மறைந்து கிடக்கும் கடவுளை (கட+உள்) தன்னுள்ளே கடந்து தேடுகின்றனர் சித்தர்கள்.

## சித்தர்களும் கடவுள் நம்பிக்கையும்

கடவுள் நம்பிக்கை, இறை வழிபாடு என்பன பற்றிய கருத்துப் போராட்டம் எல்லா நாட்டுப்

புராணங்களிலும், எல்லாச் சமு தாயங்களிலும் உண்டு. "கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட மத அமைப்புக்கள் அனைத்தும் இன்று முதல் மூடப் படுகின்றன" என்று சட்டமியற் றிய அல்பேனிய அரசு 13.11.76—ல் தன்னை மத மறுப்பு அரசாகப் பிரகடனம் செய்தது. அதேவேளை மதமே எத்தனையோ அரசுகளின் இருத்தலுக்கும் அடிப்படையாக வும் உள்ளது. எனவே சாதாரண மனிதர்களிடம் மட்டுமல்ல, அரசு களிடமும் கூட கடவுள் நம்பிக்கை பற்றிய கேள்வி இன்றுவரை முடிவடைந்ததாக இல்லை. ஆகவே கடவுள் உண்டா? இல்லையா? என்ற கேள்வியை உயிரற்ற வினா வென்றும், தற்கால உலகில் இடம் பெறத் தகுதியற்ற வினாவென்றும் கருதவேண்டியதில்லை. நிறைவான விடை கிடைக்கும்வரை அது உயி ருள்ள வினாவாகவே இருந்து வரு கிறது.

இதில் சித்தர்களின் இடம் எது என்பதே இங்கு முக்கிய கேள்வி யாகும். கடவுள் உண்டு என்று நம்புவதால் உலக தத்துவப் போக் கில் சித்தர்களை ஆத்திகர் எனலாம். வேதங்களையும் வேதச் சடங்குக ளையும் பெரிதும் சாடுவதால் இந்தியத் தத்துவ மரபில் சித்தர் களை நாத்திகரெனலாம். காலத் தால் முற்பட்ட சிவவாக்கியார், அகப்பேயார், பாம்பாட்டியார் போன்றோர் வேதத்தின் ஆதிக் கத்தை எதிர்த்து அதன் சிறப்பை மறுத்து நிற்க; காலத்தால் பிற் பட்ட கடுவெளியார் போன் றோரோ," வேத விதிப்படி நில்லு" என்று வற்புறுத்தி, வேத நெறிக்கும் சித்தர் நெறிக்குமிடையே சமரசம் காண முயன்றனர். ஆகவே சித்தர் அனைவருக்கும் பொருந்துமாறு சொல்ல வேண்டுமானால் அவர் கள் கடவுள் நம்பிக்கையுள்ள ஆத் திகரென்றே கூறவேண்டியிருக்கிறது.

## சித்தர்களும் சமயமும்

சமய எல்லையைக் கடந்து நின்று இறையின்பம் காண முயன்ற வர்கள் எல்லா மதங்களிலும் நாடு களிலும் உண்டு. இந்துமதத்தில் அவர்களைச் சித்தர்கள் என்கிறோம். கிறிஸ்துவத்தில் "மிசுடிக்குகள்" என் றும், சீனத்தில் "தாவோக்கள்" என வும் இசுலாத்தில் "சூபிகள்" என் றும் அழைக்கப்படுகிறார்கள். இவர் களுடைய நெறிகளிடையே சிறு சிறு வேறுபாடிருப்பினும் அடிநாத மாக ஓர் ஒற்றுமை காணப்படுவ தால் அனைவரின் கோட்பாடுக ளையுமே சித்தர் நெறியெனக் கூற லாம். புற ஆதாரங்களாகிய திருக் காட்சி, அசரீரி, தோத்திர வழிபாடு போன்றவற்றின் துணையேது மின்றி, நேரடியாக இறைவனோடு தொடர்பு கொள்ள முடியும் எனக் கருதியதே இவர்கள் நெறி. சித்தர் கள் பயன்படுத்திய சமயச் சொற்க ளைக் காரணம் காட்டி அவர்க ளைச் சமய எல்லைக்குள் அமைக்க முற்படுவது சரியாகாது. எந்த மதத் தையும், பண்பாட்டையும், பாரம் பரியத்தையும் சாராமல் தனித்தி யங்கும் ஆற்றலுடையதே சித்தர் நெறியாகும்.

## முத்தி நிலையும் சித்தர்களும்

முத்தி தரும் தேவலோகம் எப்படியிருக்கும் என்னும் கேள்வி யும், அதற்கான பதிலும் மனித மனதை எப்போதுமே அலைக் கழித்து, சுவையூட்டி வருகிறது. ஆனால் இத்தகைய முத்தி நிலை பற்றி பதில் தராது மௌனத் தையே கடைப்பிடித்தனர் சித்தர் கள். முத்தியென்பது இருமையற்ற நிலை. அறிவோனும் அறியப்படும் பொருளும் தானேயாகி நிற்கும் தனியொருநிலை. அதை விளங்கப் படுத்த மனிதனால் உருவாக்கப் பட்ட மொழியால் முடியாது. ஆகையால் சித்தர்கள் அந்த இன்பத்தை மொழியாது மௌனத் தைக் கடைப்பிடித்தனர். அறிவு, மொழி ஆகியவற்றின் ஆழ அகலங் களுக்கு அப்பாற்பட்ட பெருமை யுடையது முத்திநிலை. அது ஓர் அனுபவம். அதை அனுபவிக்க முடியுமே தவிர வெறும் சொற்க ளைக் கொண்டு விளக்க முடி யாது. அறிவும் மொழியும் முத்தி நிலையை விளக்கப் போதிய, முழுமையான கருவிகள் அல்ல. இறுதியான நிறைவு நிலை என்பது ஒன்றுதான் அதில் படி நிலை களோ பாகுபாடுகளோ இல்லை. நிறைவு நிலை என்னும் முத்தி கைவரப்பெற்ற அனைவரும் ஒரே நிலையினரே. அவர்களில் உயர்வு தாழ்வு இல்லவேயில்லை என் பவை சித்தர்கள் கூறும் முத்திக் கொள்கையாகும்.

## சமூக சீர்திருத்தமும் சித்தர்களும்

சமுதாயத்தில் கலந்து சமுதா யத்திற்காக வாழ முற்படாத ஆன் மீக வாதிகளைச் சமுதாயம் புறக் கணித்துவிடும். சமூக ஒழுங்கையும், பாதுகாப்பையும் பயன்படுத்திக் கொண்டு, அச் சமூகத்திற்கு எவ வகையிலும் பயன்படாது ஒதுங்கி விடுவோர் சமூகக் குற்றவாளிக ளாகவே கருதப்படுவார். தான் நின்ற இடத்தின் சூழலை எண் ணிப்பாராது வானில் தெரியும் வண்ணக் காட்சிகளை ஒருவர் கண்டுகழிக்க முற்படுவது இயல் பிற்கு மாறான செயல். சித்தர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மக்களை ஒன்றுபடுத்த தம்மாலி யன்றளவு பாடுபட்டார்கள். மக்க ளிடையே உள்ள சமயப் பற்றால், நெறியால் அன்பு பெருக வேண் டுமே தவிர பூசல்கள் பெருகத் தேவையில்லையென எடுத்துரைத் தனர். "அன்பாயிரு" என்றே எல் லாச் சமயங்களும் சொல்கின்றன. ஆனால் யாருமே இதுவரை அன்பிற்கு ஏது எல்லை என்பதை


மட்டும் சொல்லவில்லை. ஆனால் மனிதனின் தன்னலமோ அன்பிற்கு எல்லை வகுத்தது. இவ்விதம் எல்லைக்குட்படுத்தப்பட்டு விட்ட அன்பு பிற சமயத்தார் மீதும், பிற இனத்தார் மீதும் வெறுப்பையே வளர்த்தது. இவ் வெறுப்பே சமயப்பூசலாகி பலகோடி மக்களின் இறப்பிற்கும் காரணமாயிற்று. இதன் காரணமாகவே சித்தர்கள் மதங்களை வெறுத்தனர். மானிடம் என்பது ஒன்றேயொன்றுதானென்ற கொள்கையுடைய இவர்கள் பிறப்பால் வரும் சாதி முறைமையையும், தொழில், நிறம், வாழிடம் இவற்றைக் கொண்டு மக்களை இழிவுபடுத்துவதையும் வன்மையாகக் கண்டித்தனர். தனிமனித வாழ்வையும், சமுதாய அமைப்பையும், சமயங்களின் போக்கினையும் நெறிப்படுத்தி அமைதி பொங்கும் சமநிலையைச் சமுதாயம் காண உழைத்தார்கள். இதனால் இவர்களை சமூக சிற்பிகள் என்றே கருதவேண்டும்.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்பது இவர்களின் கொள்கைகளில் ஒன்று. பேரண்டத்தில் காணப்படும் பொருள், இயக்கங்கள், விதிமுறைகள் யாவும் பிண்டமாகிய நம்முடலிலும் இருக்கின்றன. அண்டப் பெருவெளியில் நடக்கும் பௌதீக, இரசாயன மாற்றங்களும் நம்முடலிலும் உண்டு. அண்டத்தின் சுருக்கமாகப் பிண்டமும்; பிண்டத்தின் விரிவாக அண்டமும் இருக்கிறது. ஆகவே பிண்டத்தை அண்டமாக மாற்ற முடியுமென்கின்றனர் சித்தர்கள். ஆன்ம விடுதலை, மரணமில்லாப் பெருவாழ்வு, வெட்டவெளி என்பவையே சித்தர்களின் முதன்மையான முடிவான குறிக்கோளாகும்.

ஆதார நூல்
சித்தர் தத்துவம்,
பேராசிரியர். க. நாராயணன்
தத்துவப் பேராசிரியர் தாகூர்
கலைக்கல்லூரி

# 53 வருடங்களின் பின் கண்டெடுத்த புத்தகம்

புத்தகங்களைக் கையில் கொடுத்தால் சுருட்டிக் குழாய்போல வைத்துக் கொள்வது, மேசையில் இருக்கும் புத்தகங்களின் மீது தேநீர்க் கோப்பையை வைப்பது, அதையும் தாண்டிப்போய் சாப்பிட்டு எஞ்சிய மீன் முட்களை புத்தகங்களின் மீது வைப்பது போன்ற காரியங்களைச் செய்பவர்களைக் கண்டால் பழைய இராணுவ வீரர் ஸ்ரீபன் றெஸ்பிக்கு பிடிக்கவே பிடிக்காது. இரவல் வாங்கிய புத்தகங்களை திருப்பிக் கொடுக்காமல் விடும் பேர்வழிகளைப் பார்த்தால் இவரால் சகித்துக் கொள்ளவே முடிவதில்லை. 53 வருடங்களுக்கு முன்னர் உலகயுத்தம் நடைபெற்றபோது இவர் ஜேர்மனியில் உள்ள நூல் நிலையமொன்றில் புத்தகமொன்றை இரவல் வாங்கியிருந்தார். யுத்தம் காரணமாக புத்தகம் எங்கோ தொலைந்துவிட்டது. இதற்கான தண்டப்பணமான 10 பெனிக்குகளை



Boden, som gav Stan dårlig samvittighed

நூல் நிலைய அதிகாரிகள் அவரைப் பாராட்டினாலும் 53 வருடங்களுக்கான தாமதப்பணத்தைக் கட்டும்படி கேட்டுள்ளனர். ஒரு வாரம் தாமதத்திற்கு 10 பெனிக்குகள். ஆனால் 53 வருடங்களுக்கு எவ்வளவு ஆகும். நேரமிருந்தால் கணக்குப் போட்டுப் பாருங்களேன்.

அவர் அப்போதே கட்டிவிட்டார். தற்போது அதே புத்தகம் வீட்டின் மேலே இருந்த பரணில் ஓர் சிறிய பெட்டியின் அடியில் இருந்தபோது கண்டுபிடித்திருக்கிறார். 10 பெனிக்காயினும் புத்தகமொன்றைக் கொலை செய்து தண்டம் கட்டுவது அவருக்கு விருப்பமில்லை. புத்தகத்துடன் நூல்நிலையம் சென்று தண்டம் கட்டியதற்கான பற்றுச் சீட்டையும் புத்தகத்தையும் ஒப்படைத்திருக்கிறார். மகிழ்ச்சியடைந்த நூல் நிலைய அதிகாரிகள் அவரைப் பாராட்டினாலும் 53 வருடங்களுக்கான தாமதப்பணத்தைக் கட்டும்படி கேட்டுள்ளனர். ஒரு வாரம் தாமதத்திற்கு 10 பெனிக்குகள். ஆனால் 53 வருடங்களுக்கு எவ்வளவு ஆகும். நேரமிருந்தால் கணக்குப் போட்டுப் பாருங்களேன்.





# வாசிப்புக் கல்வி

**வாசிப்புக் கல்வியில் உலகில் நான்காவது இடம் பெறுகிறது நியூசிலாந்து**
**அங்கு எப்படி நடைபெறுகிறது வகுப்பறைக் கல்வி நேரடி அனுபவங்கள்!**

தகவல் சாதனங்களிடையே ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான வளர்ச்சி ஐரோப்பிய நாட்டு மாணவரிடையே வாசிப்புக் கலையை பெருமளவில் பாதிக்கத் தொடங்கிவிட்டதை ஐரோப்பியப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களும், கல்விமான்களும் மிக வேகமாகவும் கவலையுடனும் உணரத் தொடங்கியுள்ளார்கள். உலகில் வாசிப்புத் தரம் பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள அளவீடுகளில்



ஐரோப்பாவிற்கு வெகு தொலைவில் அமைந்திருக்கும் நியூசிலாந்து நாட்டின் மாணவர்கள் வாசிப்புக் கலையில் மிகச் சிறப்பாக அடைந்திருக்கும் தேர்ச்சியானது கல்வித் துறை அறிஞர்களின் கவனத்தைக் கவர்வதாயுள்ளது. ஒன்பதாவது வகுப்பிற்கு மேல் வாசிப்பில் நான்காவது இடம், ஒன்பதாவது வகுப்பிற்குக் கீழ் வாசிப்பில் ஆறாவது இடத்தையும் உலகளவில் பெற்றுள்ள நியூசிலாந்து நாட்டிற்கு நேரடியாக விஜயம் செய்து, அங்குள்ள கற்பித்தல் தொழில் நுட்பத்தை வகைப்படுத்தித் தந்துள்ளார் டெனிஷ் கல்வியியலாளரான கெலா லாவ்றிட்சன்.

சிறந்த கல்விக்கு திறவு கோலாக அமைவது வாசிப்பு. மாணவரிடையே சிறந்த கூர்மையான கருத்தியலை வளர்த்தெடுக்க வேண்டுமானால் அவசியமாக அமைவது வாசிப்பு. கல்வியின் வளர்ச்சிக்கும், சந்தேகங்களால் நகர முடியாமல் நிற்கும் அறிவின் முட்டுக்களை அவிழ்த்தெடுக்க துணையாக அமையும் ஆசான் வாசிப்பு. வளர்ச்சிக்கும் வாழ்க்கைப் பெறுமதிக்கும் அவசியமாவது வாசிப்பு போன்ற வசனங்களை நியூசிலாந்து பாடசாலைகளின் வகுப்பறைகளில் இலகுவாக அடையாளம் காண முடிகிறது. மாணவர்களுக்கும் இதற்காகவே விஷேடமான பயிற்சிகளை வழங்கிவருகிறார்கள். நியூசிலாந்திலுள்ள லின்கொலன் உயர்



நிலைப் பாடசாலையில் உள்ள பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவரைக் கண்டு கேட்டபொழுது மாணவர்கள் முதலில் பழக வேண்டியது வாசிப்பு என்று அழுத்திச் சொல்லியபடியேதான் தனது வரவேற்பையும் கூறிக் கொண்டார்.

நியூசிலாந்தின் மேற்குப் பகுதியில் உள்ள லின்கொன் பாடசாலையின் ஓர் ஆரம்ப வகுப்புக் கல்வியறைக்குள் நுழைகிறோம். ஆசிரியை லீசா ஸ்ரம்ஸ்சும் 14 மாணவர்களும் வரவேற்கிறார்கள்.

இங்கு 6 வயதிலிருந்தே பாலர் வகுப்பிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆயினும் 99 வீதமான பிள்ளைகள் ஐந்து வயதைத் தாண்டியவுடனேயே பாடசாலைக்கு வந்து விடுகிறார்கள் என்று சிரித்தபடியே கூறுகிறார் லீசா. வகுப்பறை முழுவதுமே பல்வேறு விடயங்கள் எழுதப்பட்டும், வர்ணங்கள் பூசப்பட்டும் காணப்படுகின்றன. கவிதைகளும், ஓவியங்களும், மாணவர்களின் ஆக்கங்களாக உள்ளன. வகுப்பறையின் பிரதான மூலையில் ஓர் வகுப்பு நூல் நிலையம் உள்ளது. மறுபுறம் புதிதாக வந்த புத்தகங்களைத் தாங்கியபடியே சுழலும் புத்தக இறாக்கை ஒன்று தென்படுகிறது. தலைக்கு மேலே இந்த வாரத்திற்கான எழுத்துக்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. அந்த எழுத்துக்களை அடிப்படையாக வைத்து சொற்களை எழுதுவதும் வசனங்கள் அமைத்து வாசிப்பதும் அவ்வாரத்திற்குரிய பயிற்சிகளாக அமையும்.

முதலாவதாக அன்றைய கவிதையை ஆசிரியர் வாசிக்கிறார். உரத்த குரலில் மாணவர்களும் திருப்பிக் கூறுகிறார்கள். இந்தக் கவிதை வரிகள் ஒளிப்பட மூலம் சுவரில் விழுத்தப்பட்டுள்ளன. 'இன்றைய கவிதை' என்று கூறப்பட்ட அக்கவிதையை ஒருநாள் மட்டும் வாசிப்பதல்ல திரும்பத் திரும்ப வாசிக்கிறார்கள். இதுமனப்பதிவிற்கு அவசியம் என்கிறார்கள்.

அடுத்து இன்றைய கதையை நூல் நிலையத்திலிருந்து மாணவர்களே தெரிவு செய்கிறார்கள். அப்புத்தகத்தில் ஒரு கதை இரண்டொரு வரிகளிலேயே இருக்கும். எனவே ஒவ்வொரு எழுத்துக்களாக உச்சரித்து சகல எழுத்துக்களையும் கூட்டிக்கொள்ள முடிகிறது. வகுப்பு ஐந்து பேரைக் கொண்ட மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரிவு வாசிக்க; மறு பிரிவு அதையே படமாக வரைகிறார்கள்; மூன்றாவது பிரிவு எழுதுகிறார்கள். ஆசிரியை ஒவ்வொரு மாணவராக



அவதானித்து வருகிறார். இப்படியாக மூன்று குழுக்களும் வாசிப்பதும், எழுதுவதும் வரைவதும் ஆகிய மூன்று காரியங்களையும் ஒழுங்காகச் செய்து முடிக்கிறார்கள். இதனால் மாணவர்களின் கவனம் சிதைவடையாமல் ஒருமுகப்படுத்தப்படுகிறது.

ஒரு விடயம் திரும்பத் திரும்ப வாசிக்கப்படுகிறது. வாசிப்புப் புத்தகங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு பகுதியை ஆசிரியர் உரத்த குரலில் வாசிக்க மறு பகுதியை மாணவர் உரத்த குரலில் வாசிக்க வேண்டும். உதாரணம்; “The mouse went under” என்று ஆசிரியர் கூற, “The cat went under” என மாணவர் மறுபகுதியை வாசிப்பர். இதன் மூலம் ஆசிரியர் கற்பிக்க முயலும் இலக்கு, மேலே, கீழே, உள்ளே, வெளியே போன்ற சொற்களையாகும். இன்றைய வாசிப்புக்குரிய புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று பெற்றோருடனும் சேர்ந்து வாசிக்க வேண்டும். பின்னர் மறுநாள் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

அடுத்து ஆசிரியை மாணவர்களின் குழுக்களை மாற்றியமைக்கிறார். சிறிய கற்களைக் கொடுத்து பட்டுப் பூச்சிபோல வர்ணமிடும்படி கூறுகிறார். செய்து முடிந்ததும் அதன் பெயரை எழுத வேண்டும். எழுதிய பெயரை வைத்து இரண்டொரு வசனங்களை எழுத வேண்டும். அதை ஒவ்வொரு எழுத்தாகத் தொட்டுத் தொட்டு வாசிக்க வேண்டும்.

**நூல் நிலையத்தையும் வகுப்பறையையும் தனித்தனியாகப் பிரிக்காது வகுப்பறையையே நூல்நிலையமாக்கி, வாசிப்பையே ஜீவநாடியாக்கி, ஆசிரியர், மாணவர், பெற்றோர், அரசு என்று நான்கு முனைகளிலும் ஏகோபித்த முறையில் வாசிப்பை உற்சாகப்படுத்துகிறார்கள்.**

இதன் பின் பாடல் ஆரம்பிக்கும். ஆசிரியை “Are you watching” என்று பாட மாணவர், “Are you listening” என்று அதே ஓசையில் பாடுவர். ஆசிரியர் ‘Are you quiet’ என்றவுடன் மாணவர் வாயில் விரலை வைப்பர். இதன் மூலம் பாடும் போதே மாணவர் பொருளை விளங்குகிறார்களா என்பதை ஆசிரியர் அவதானிப்பர்.

குறைந்தது பத்து நிமிடத்திற்கு ஒரு தடவை அல்லது அரை மணி நேரத்திற்கு ஒரு தடவை விடயங்களும் செயற்பாடுகளும் மாற்றப்படுகின்றன. இதனால் மாணவரின் மூளை பாடசாலை ஆரம்பத்திலிருந்து முடியும்வரை உற்சாகமாகவே செயற்படுகிறது. தேநீர் இடைவேளைக்குப் பின்னர் இதர பாடங்கள் ஆரம்பிக்கும். 8.30 இலிருந்து 13.30 வரை பாடசாலை நடைபெறும்.

மாணவர்களுக்கு மட்டுமல்ல எல்லா ஆசிரியர்களுக்குமே எப்படி வாசிப்பது என்பதைக் கற்பிக்கிறார்கள். 300 மணித்தியாலங்களைக் கொண்ட விஷேட பயிற்சி இங்கு கட்டாயமாகும். மேலும் 3 வருடங்களைக் கொண்ட விஷேட வாசிப்பு பயிற்சிக் கல்வியை நியூசிலாந்து ஆசிரியர் பயிற்சிக் கழகம் நடத்திவருகிறது.

எந்த வகுப்பறைக்குள் நுழைந்தாலும் அவை புத்தகங்களாலேயே நிறைந்துகிடப்பதை அவதானிக்க முடிகிறது. நூல் நிலையத்தையும் வகுப்பறையையும் தனித்தனியாகப் பிரிக்காது வகுப்பறையையே நூல் நிலையமாக்கி, வாசிப்பையே ஜீவநாடியாக்கி, ஆசிரியர், மாணவர், பெற்றோர், அரசு என்று நான்கு முனைகளிலும் ஏகோபித்த முறையில் வாசிப்பை உற்சாகப் படுத்துகிறார்கள். வாசிப்புக் கலையை கல்வியின் முதற்புள்ளியாக வைத்திருக்கும் நியூசிலாந்து அடுத்த ஆண்டு வாசிப்பில் உலகின் முதலாவது இடத்தைப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒரு புத்தகத்தை ஒரு தடவைக்குமேல் வாசிக்க மறுக்கும் ஐரோப்பிய மாணவருக்கும் களைப்பின்றி ஒன்றையே திருப்பித் திருப்பி வாசிக்கும் நியூசிலாந்து மாணவருக்குமிடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. ஆயினும் சமூகரீதியாகவே வாசிப்பின் உயர்வை நேசிக்கும் நியூசிலாந்தின் அனுபவங்கள் நமக்கு நல்ல முன்னுதாரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

HELLE LAURITSEN




# 16_வது

பெரும்பாலான உலக ரசிகர்களை தன்னகத்தே கவர்ந்துள்ள விளையாட்டு உதைபந்தாட்டமாகும். உலக நாடுகள் எங்கும் பரந்து பட்டு காணப்பட்ட போதிலும் ஐரோப்பிய நாடுகளிலும் தென் அமெரிக்க நாடுகளிலுமே இவ் விளையாட்டின் ஆதிக்கம் நிலைகொண்டுள்ளது. உதைபந்தாட்டத்தில் உலகக்கிண்ணம் 1930–ம் ஆண்டு உருகுவேயில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இறுதியாக 1998 பிரான்ஸ் வரையிலும் 16 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் 8 போட்டிகளை ஐரோப்பிய நாடுகளும் 8 போட்டிகளை தென் அமெரிக்க நாடுகளும் வெற்றி கொண்டுள்ளன. ஐரோப்பாவிலிருந்து ஜேர்மனி(3), இத்தாலி(3), இங்கிலாந்து(1), பிரான்ஸ்(1) ஆகியனவும் தென்அமெரிக்காவிலிருந்து பிரேசில்(4), உருகுவே (2), ஆர்ஜென்டீனா(2) ஆகியனவும் வெற்றி பெற்றுள்ளன. போட்டிகள் கூட அமெரிக்க, ஐரோப்பிய இரு கண்டங்களிலேயே இது வரை நடைபெற்றுள்ளது. அமெரிக்க கண்டத்தில் நடைபெற்ற 7 போட்டிகளிலும் தென்அமெரிக்கரே வெற்றிவாகை சூடினர். ஆனால் ஐரோப்பாவில் நடைபெற்ற 9 போட்டிகளில் ஒரு போட்டியில் 1958–இல் பிரேசில், இதுவரை நடைபெற்ற மிகப் பெரிய இறுதியாட்ட வெற்றியாக 5:2 என்று வெற்றிபெற்றது. வரவிருக்கும் புதிய நூற்றாண்டின் முதல் போட்டியான 2002–ம் ஆண்டு போட்டியிலே ஐரோப்பிய, தென்அமெரிக்கரின் கோட்டைகள் இடம் மாறுகின்றன. அதாவது இவ்விரு கண்டங்களையும் தாண்டி முதல் முறையாக ஜப்பானிலும், தென் கொரியாவிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த மாற்றம் இன்னும் பல மாற்றங்களுக்கு வழிகாட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




16–வது உலகக்கிண்ணப் போட்டிகள் 10.06.98 சென். டெனிஸ் மைதானத்தில் பிரேசில் ஸ்கொட்லாந்து அணிகளுக்கிடையில் ஆரம்பித்து 64–ம் போட்டியான இறுதிப் போட்டியுடன் 12.07.98 இதே மைதானத்தில் மீண்டும் பிரேசில், போட்டிகளை நடத்தும் பிரான்சை சந்தித்தது. இறுதியாகவுள்ள உலகச் சம்பியனும், போட்டியை

நடத்தும் நாடும் சந்திக்கும் இறுதியாட்டம் இதுவரை எந்தப் போட்டியிலும் நடைபெறவில்லை. எனவே இது ஒரு சரித்திர முக்கியத்துவமான இறுதியாட்டமாகும். இறுதியாட்ட அணிகள் தெரிவுக்காக மொத்தம் 32 நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன. இதுவும் இதுவரையில் நடைபெறாத நிகழ்வுதான். அதாவது கூடிய நாடுகளாக 32 நாடுகள் கலந்து கொண்ட 16–வது உலகக்கிண்ண போட்டியிலே 8 குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் தலா 4 நாடுகள் வீதம் குழுவுக்குள் போட்டிகள் நடைபெற்று ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதலாம் இரண்டாம் இடம் பெற்ற 16 நாடுகள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகின. குழு போட்டிகளில் புள்ளிகள் அடிப்படையிலேயே ஆட்டங்கள் அமைந்தது. ஆனால் இரண்டாம் சுற்றிலிருந்து "நொக் அவுட்" அடிப்படையில் வெற்றிபெறும் அணிகளே முறையே கால், அரை இறுதி ஆட்டங்களுக்கு புறப்பட்டன.







*08.07.98* நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பிரான்ஸ் புதிதாக வந்து திறமையாக ஆடும் குரேசியாவை எதிர்கொண்டது. இடைவேளைக்கு முன்னர் விளையாட்டு விறுவிறுப்பாக இருந்த போதும் கோல் எதுவும் போடப்படவில்லை. ஆயினும் இடைவேளை முடிந்து போட்டி ஆரம்பமாகியவுடன் சுக்கர் தனது குரேசியாவுக்கு ஒரு கோலைப் போட அடுத்த நிமிடமே பிரான்சின் துறம் (Thuram) ஒரு கோலைப் போட்டு சமப்படுத்தினார். மீண்டும் 70 வது நிமிடத்தில் துறம் இன்னொரு கோலைப் போட்டு பிரான்சை முன்னணிக்கு கொண்டு வந்தார். 74–வது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் பிளாங் (Blanc) சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்ட போதும் பிரான்ஸ் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன் முறையாக உலகக் கிண்ண இறுதியாட்டத்திற்கு நுழைந்து கொண்டது.


# உலகக்கிண்ணம்

## அரை இறுதிப் போட்டிகள்

*07.07.98*–ல் நடைபெற்ற முதலாவது அரை இறுதிப் போட்டியில் பிரேசிலும் நெதர்லாந்தும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் தளர்வின்றி ஆட்டத்தை ஆடிய போதும் பெரியளவில் கோல்கள் போடப்படவில்லை. 46–வது நிமிடத்தில் பிரேசில் அணியைச் சேர்ந்தறொனால்டோ மிகவும் கச்சிதமாக தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் முடியும் நிலையை எட்டும் வரையில் பிரேசிலே வெற்றியைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்த போதும் 87–வது நிமிடத்தில் நெதர்லாந்தின் கிளவட் (Kluivert) தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டு முடிவை சிக்கலாக்க மேலதிக நேரம் கொடுக்கப்பட்டு இறுதியில் பனால்ட்டி முடிவுக்கு போட்டி விடப்பட்டது. இதன் போது பிரேசில் 4:2 என்ற ரீதியில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குள் நுழைந்தது.







## இறுதியாட்டம்

அகில உலகமே ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 16–வது உலகக் கிண்ண இறுதிப் போட்டி 12.07.98 ஞாயிறு இரவு 9 மணியளவில் பாரிஸ் சென். டெனிஸ் மைதானத்தில் ஆரம்பமாகியது. கிட்டத்தட்ட 80,000 பார்வையாளர்கள் மத்தியில் போட்டியை நடத்தும் பிரான்ஸ் அணியும் இப்போட்டி தொடங்கும் வரை உலக சம்பியனாக உள்ள பிரேசில் அணியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் முக்கிய அணிகளாக இருந்ததால் இரு அணிகளின் ரசிகர்களே

பெரும் தொகையில் காணப்பட்டனர்.

முதல்முறையாக இறுதிப் போட்டி ஒன்றுக்கு ஆபிரிக்க நாட்டவர் நடுவராக கடமையாற்றும் வாய்ப்பு கிடைக்க மொறாக்கோவின் பெல்கோலா தெரிவானார். பல்லாயிரக்கணக்கான நேரடிப் பார்வையாளர்களும் கோடிக்கணக்கான தொலைக்காட்சி பார்வையாளர்களும் உலகம் பூராக பார்த்து ரசிக்க ஆட்டம் ஆரம்பமானது. எதிர்பார்த்தளவு விறுவிறுப்பு ஆட்டத்தின் ஆரம்பத்தில் காணப்படவில்லை. முடிவு எப்படி அமையும் என்பதை கூற முடியாத நிலையில் இருந்த போது 27-வது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு ஒரு கோர்னர் கிடைத்தது. அதனை பிரான்ஸ் அணியின்



வீரர் பிற்றிட் (PETIT) கம்பத்தை நோக்கி மைதானத்தின் நடுப்பகுதிக்கு அனுப்ப அதனை தனது தலைமூலமாக லாவகமாக கம்பத்துக்குள் அனுப்பி கோல் ஆக்கினார் பிரான்சின் சுப்பர் ஸ்ரார் சிடான் (ZIDANE). அடங்கி இருந்த அரங்கம் பிரான்சின் ஆதரவாளர்களால் மகிழ்ச்சி பொங்க ஆரவாரப்பட்டது. பிரான்ஸ் ஒரு கோல் அடித்து முன்னணி வகித்தாலும் பிரேசில் வீரர்கள் சோர்ந்து விடவில்லை. இதுபோன்று டென்மார்க் அணியும் முதலில் ஒரு கோல் போட்டிருந்தது பிரேசில் அணியுடனான கால் இறுதியாட்டத்தில் என்பதை ரசிகர்கள் மறக்கவில்லை. ஆனாலும் இப்போட்டியை பொறுத்தவரை பிரான்ஸ் தனது சொந்த நாட்டில் பெரும்பாலான பிரான்ஸ் ஆதரவு ரசிகர்கள் மத்தியில் விளையாடி வருவதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். ஒருகோல் பிரான்ஸ் அடித்தபின்னர் போட்டியில் பெருத்த மாற்றம் ஏற்பட்டு இரு அணிகளும் உஷாராகவே ஆடின. இருப்பினும் முன்னர் போன்று இம்முறையும் 45 நிமிடத்தில் மீண்டும் ஓர் கோர்னர் பிரான்சுக்கு கிடைத்தது. ஆனால் இம்முறை கம்பத்தை நோக்கி மைதானத்தின் நடுவுக்கு அனுப்பியவர் டியோர்கெப் (DJORKAEFE). மீண்டும் அதே நாயகன் பிரான்ஸ் தேசத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும் விதமாக தலையினால் பந்தை கம்பத்தினுள் அனுப்பி இரண்டாவது கோலையும் சிடான் அடிக்கிறார். மைதானம் களிப்பில் கதிகலங்க இடைவேளை விடப்பட்




டது. இடைவேளையை தொடர்ந்து ஆட்டத்தில் மாற்றத்தை காண முடிந்தது. அதாவது பிரான்ஸ் வீரர்கள் கோல் அடிக்கும் முயற்சியை காட்டிலும் கோலை தடுக்கும் தற்காப்பு ஆட்டத்திலேயே முழு கவனத்தையும் செலுத்தி ஆடி வந்ததை அவதானிக்க முடிந்







தது. பிரேசில் அணியும் எப்படி யாவது கோல் அடித்தாக வேண் டும் என்ற மூர்க்கத்தனமான தனது முன் நிலைத் தாக்குதலை நடத்தியும் பலன் கிடைக்க வில்லை. இருந்தபோதும் 68–ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் டிசலி (DESAILLY) சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டதால் பிரேசில் அணியினர் கோல் போடும் சாத்தியகூறு கூடுதலாக தென்பட்டது. அப்படி இருந்தும் அவ்வாறு நடைபெறவில்லை. மாறாக ஆட்டத்தின் இறுதி நிமி டத்தில் பிரான்ஸ் வீரர் பிற்றிட் (PETIT) ஒரு கோலைபோட்டு பிரேசில் அணியின் தோல்வியை மாற்றமுடியாத நிலைக்கு இட் டார். ஆட்டம் முடிவுக்குரிய ஒலி எழுப்பப்பட்டது. பிரேசில் வீரர் கள், ரசிகர்கள் கவலையில் வாடி வதங்க பிரான்ஸ் வீரர்களும் ரசிகர்களும் தமது நாட்டுக்கு கிடைத்த முதலாவது மகத்தான வெற்றியை பெரும் புன்முறுவலு டன் ஆடிப்பாடிக் கொண்டாடி யது மட்டுமன்றி முழு பிரான்ஸ் தேசமே இந்நிகழ்வை ஒரு சரித்திர திருப்பமாக கொண்டாடியது. இதற்கு முன்பு பிரான்ஸ் 1958, 86–ம் ஆண்டுகளில் மூன்றாவது இடத்தையும் 1982–இல் 4–வது இடத்தையுமே பெற்றிருந்தது.

பொன். தாமோதரம்

## உலகக் கிண்ணத்தில் எண் சோதிடம்

1966–ல் இருந்து 1998 வரை நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஆண்டுகளையும், நாடுகளையும் வகைப்படுத்தினால் எண் சோதிடப்படி இங்கிலாந்தே வெற்றிபெறும் என்று சிலர் கூறினார்கள். கீழே உள்ள அட்டவணையை நோக்குங்கள்.

| பிரேசில் | ஜேர்மனி | ஆர்ஜன்டீனா | இங்கிலாந்து |
|---|---|---|---|
| 1970 | 1974 | 1978 | 1966 |
| 1994 | 1990 | 1986 | ? |
| 3964 | 3964 | 3964 | 3964 |

இதன்படி பார்த்தால் 1998–ல் இங்கிலாந்து அணியே வெற்றிபெறுமெனக் கணித்தார்கள். 1966+1998–ஐக் கூட்டினால் வரும்விடை 3964. இங்கிலாந்து அணிக்கு எண் சோதிடமும் கைகொடுக்கவில்லை. இதுபோல டயானாவின் மரணத்தை முன்னரேகூறிய சாஸ்திரி இம்முறை பிரேசிலே வெல்லுமெனத் தெரிவித்திருக்கிறாரெனக் கதைத்தவர்களும் உண்டு.



# அமெரிக்க அதிபரின் சீன விஜயம்?



சீனாவும் அமெரிக்காவும் கொள்கை ரீதியாக எதிரெதிரான நாடுகள். கம்யூனிசத் தாயும், ஜனநாயகத் தாயும் பெற்றெடுத்த தூய பிள்ளைகள் போல உலக அரங்கில் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் நாடுகள். இவர்கள் இருவரும் சந்திக்க முடியாதென்பதே இதுவரை இருந்து வந்த பொதுவான கணிப்பாகும். ஆனால் இவர்கள் வகுத்துள்ள கோட்பாடுகளுக்கு அப்பால் இரு நாட்டுத் தலைவர்களும் சந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பது ஏன் என்பது முக்கிய கேள்வியாகும். இவர்கள் இருவருடைய சந்திப்பும் ஆசிய வட்டகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் காரணிகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துமென்பது உடனடியாகத் தெரியவில்லை. எனினும் இரு நாடுகளின் தரப்பிலும் மேசையில் வைக்கப்பட்ட முக்கிய விடயங்களை பின்வருமாறு வகுத்துக் கொள்ளலாம்.

## சீனாவிடம் அமெரிக்காவின் வேண்டுகோள்

1– சீனா கண்டிப்பாக தொலை தூர ஏவுகணைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும்.

**ஒருவர் மீது மற்றவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை இருவருமே மறுபரிசீலனை செய்வதில் அக்கறை கொள்வதைவிட அவைகளைப் பேசுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென பரஸ்பரம் கோரிக்கைவிடுத்துள்ளனர்**

2-- சிறையிலிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் வேண்டும். மக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரமளித்தல் வேண்டும். திபெத் தொடர்பாக தலாய்லாமாவுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.





*3– சர்வதேச ரீதியாக போதை வஸ்துக் கடத்தலைத் தடுக்க சீனா உதவ முன்வர வேண்டும்.*

*4– உலக வர்த்தக ஸ்தாபனத்தின் கொள்கைகளுக்கிணங்க சீனாவில் திறந்த வெளிச் சந்தைகளை ஏற்படுத்த வேண்டும்.*

*5– கிழக்கு ஆசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிற்கு சீனா உதவ முன் வந்தமைக்கு அமெரிக்கா நன்றி கூறுகிறது.*

*6– உலகத்தில் அதிகரித்துவரும் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் 'கியோட்டோ' திட்டத்தில் சீனாவும் இணைந்துகொள்ள வேண்டும்.*

## அமெரிக்காவிடம் சீனா வைத்துள்ள வேண்டுகோள்

*1– தாய்வான் உட்பட சீனா என்பது ஒன்றேயொன்றுதான் அதை அமெரிக்கா கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

*2– சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்து வருவதை நிறுத்தி, சீனாவின் மீது விதிக்கப் பட்டுள்ள தடைகளையும் விலக்க வேண்டும்.*



*3– சீனாவின் பொருட்களுக்கான சரியான வர்த்தக அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும்.*

*4– உலக வர்த்தக ஸ்தாபனத்தில் சீனா இடம்பெறுவதற்கு போடும் தடைகளைக் குறைத்து முற்றாக நீக்க வேண்டும்.*

இவ்வாறாக இரு நாடுகளும் பேசியுள்ளன. இக்கோரிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் இரு நாடுகளுமே ஒன்றில் ஒன்று சில தேவைகளுக்காகத் தங்கியிருப்பது தெரியவரும். மேலும் ஒருவர் மீது மற்றவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை இருவருமே மறுபரிசீலனை செய்வதில் அக்கறை கொள்வதைவிட அவைகளைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென பரஸ்பரம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன் பொருட்டு ஆளுக்காள் சில சலுகைகளையும் பரிமாறிக் கொண்டுள்ளனர். இரு நாடுகளும் தம்மிடையே பொருளாதார காரணிகளுக்காகக் கைகுலுக்கிக் கொண்டமையானது இவர்களின் ஏற்றுமதிப் பொருள்களின் சந்தைப்படுத்தலை ஸ்திரப்படுத்துவதாகவும் உள்ளது. ▣

## எனது தேசம்

எதிர்த்து நில் எதிர்த்து நில் எனவும்
பிரக்ஞையின் விளிம்பிலிருந்து
பிதுங்கி வழிகிறது ஓர் குரல்

குரல் கேட்டு விழித்தேன்
கனவென்று புரிந்தது.

கனவில்கூட என் தேசமும்
என் ஆத்மமும்
இப்படியா இருக்க வேண்டும்?

—ஆதவன்

## நயகரா

இந்த அருவியில் குளித்தால்
வாழ்க்கை வணக்கத்துக்குரியது
இந்த அருவியில் இறந்தால்
மரணம்கூட மரியாதைக்குரியது


## ஜனநாயகம்


தேர்ந்தெடுப்பது மனிதரையென்றால்
வாக்குமட்டும் ஏன்
சிங்கம் புலி குரங்கிற்கு.......

— வைரமுத்து

# THX ஒலியமைப்பும் ARMAGEDDON திரைப்படமும்

THX என்னும் புத்தம் புதிய ஒலித்தொழில் நுட்பம் இப்போது திரையரங்குகளில் அறிமுகமாகத் தொடங்கியிருக்கிறது. டென்மார்க்கின் தலைநகர் கொப்பன்கேகனில் இரண்டொரு திரையரங்குகளில் THX ஒலித் தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். நாமறிந்த யாழ். வின்சர் படமாளிகையைவிட பல மடங்கு விஸ்தீரனமான இம்பீரியல் திரையரங்கில் THX ஒலியமைப்புடன், இப்போது பரவலாகப் பேசப்படும் ARMAGEDDON திரைப்படத்தைப் பார்த்தபோது, இதுவரை நமக்கும் திரைக் காட்சிக்கும் இடையிலாக ஓடியிருந்த மெல்லிய இடைவெளி கூடத் தொலைந்து போக பூமியை அழிக்கவரும் பிரமாண்டமான எரிகல்லை ஏதோ நாமே உடைத்து, உலகைக் காக்கப் புறப்பட்டுவிட்டதைப் போன்ற உணர்வை உண்டுபண்ணுகிறது ஒலியமைப்பு.








சினிமாவில் டொல்பி டிஜிரல் ஒலியமைப்பு முறை 1992 ஜூன் மாதம் அறிமுகமாகியது. அதன் பின் அது 27 நாடுகளில் விரிவடைந்து, 600 திரைப்படங்கள் வரை இத்தகைய தொழில் நுட்பத்துடன் வெளிவந்தன. இந்த ஒலியமைப்பானது இனிமை, துல்லியம், பிசிறல் இல்லாத தெளிவு காதைச் சுற்றிவரும் அலை வரிசைகளுடன் உலகின் உயர்ரக ஒலிக் கலவையாகி சுகமாகக் காதுகளுக்குள் ஜீவனம் பண்ணியது. பார்வையாளனைக் கதையோடும் கலவை பண்ணியது. ஆனால் திரைக் கதையை பார்வையாளனுக்கு நேரடி அனுபவமற்ற அண்டவெளிக்குள்ளோ அல்லது ஆழ் கடலுக்குள்ளோ நகர்த்தும்போது உரையாடல்களால் விளங்கப்படுத்த முடியாத புத்தம்புதிய அனுபவங்களின் அதிர்வையும்,




In post production, the soundtrack channels are encoded onto two audio tracks

பிரமையையும் சொல்லி முடிக்க டொல்பி டிஜிரல் போதியதாக அமைந்திருக்கவில்லை. சில பிரமாண்டமான திரைப்படத் தயாரிப்பாளர்களுடைய புதிய கற்பனைகளுக்கு டொல்பி டிஜிற்றலால் ஈடுகொடுக்க முடியவில்லை. அந்த வகையில் மேலும் ஒருபடி துல்லிய வடிவமாக பட்டை தீட்டப்பட்ட வைரக்கல் போல 'பளிச்' என அறிமுகமாகியிருப்பது தான் THX ஒலியமைப்பு. ஆறு விஷேடமான வழிகளிலிருந்து 360 பாகை வழியாக முப்பரிமாணமாகப் புறப்பட்டுவரும் ஓசை நம்மைத் திணறடிக்க வைக்கிறது.

Tomlinson Holmans eXperiment என்பதே THX என்னும் குறியீட்டின் கருத்தாகும்.

ஏற்கனவே 'டைகாட்' போன்ற ஆங்கிலத் திரைப்படங்களின் மூலமாக பிரபலம் பெற்றிருந்த புறூஸ் வில்லீசின் நடிப்பில் வெளியாகியிருந்தது இப்படம். ஏற்கனவே நாமறிந்த அமெரிக்கத் தனத்துடன் தான் கதை ஆரம்பமாகிறது.



காட்சியமைப்புக்களும், வேகமும் பார்வையாளரைக் கதிரையின் விளிம்பிற்கே தள்ளித்தள்ளிச் செல்கின்றன. பத்தாயிரம் அணுகுண்டுகளை ஒன்றாக வெடித்தால் ஏற்படும் தாக்கத்தைக் கொண்ட எரிகல் பூமியை நோக்கி மோத வருகிறது. 18 நாட்கள் மட்டுமே பாக்கி; அதற்குள் அதை அண்டவெளியிலேயே தகர்த்து, பூமியைக் காக்க வேண்டியது புறூஸ் வில்லீஸ் தலைமையிலான குழுவின் கடமை. அதை நிறைவேற்றுவது தான் திரைக்கதை. எதிர்பார்த்தபடியே நிறைவேற்றுகிறார்கள். ஆனால் ஒன்று; அணு ஆயுதத்தால் அந்தக் கல்லை உடைப்பதற்கும் இறுதியில் உயிராயுதமே உதவும் என்று விளக்கம் தருகிறது இத்திரைப்படம். உலகைக் காக்க உயிராயுதத்தைப் பயன்படுத்துவதாகக் கூறும் அமெரிக்கப் பார்வை, அண்டவெளியில் அல்ல உலகிலேயே உயிராயுதத்தைப் பயன்படுத்த வேண்டிய நெருக்கடி நிலைக்குள் ஓரினம் இருப்பதை ஏனோ பார்க்க மறுத்திருப்பதையும் அத்தருணம் நினைவுபடுத்தாமலிருக்க முடியவில்லை.

தமிழில் இரு திரைப்பட நிறுவனங்கள் ஒரே கதையைப் படமாக்கி வில்லங்கப்பட்ட சம்பவங்கள் புராணப்படங்களைத் தயாரிக்கும் காலங்களில் மிகக் கூடுதலாக இருந்தது. அவ்வையார், அம்பிகாபதி போன்ற படங்கள் இதற்கு நல்ல உதாரணங்கள். அதுபோலத் தான் DEEP IMPACT –ம் ARMAGEDDON–ம் ஆகும். இரண்டுமே கதை ஒன்றுதான். ஆனால் தொழில் நுட்பங்கள் வேறுவேறாக இருக்கின்றன. ஹொலிவூட்டில் ஒவ்வொரு வருடமும் திரைப்படத்திற்குரிய புதுப்புதுத் தொழில் நுட்பங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். அதை விலைக்கு வாங்கும் நிறுவனங்கள் அதற்கேற்ப கதையை அமைத்து, நடிகர்களைப் போட்டு, திரைப்படங்களாக்கி பெரும் பணம் சம்பாதிப்பதுதான் உண்மையாக நடைபெறுகிறது. திரைக்கதையை அமைத்துவிட்டு அதற்கேற்ப இதர விடயங்களைத் தேடுவோர் தமது திரைப்படங்களில் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவது இயலாத காரியமே. நான்கு முக்கியமான தொழில் நுட்பத் தாக்கங்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். தாக்கம் கூடிய ஒன்றை முதலிலும் இன்னொன்றை இறுதியிலும் பாவிக்கிறார்கள். மற்ற இரண்டும் நடுப்பகுதியில் வருகின்றன. அவைகளைத் தொடுக்க காட்சிகளும் உரையாடலும் அமைகிறது. ARMAGEDDON–ஐப் பார்த்தால் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

★

# ஜேர்மனியில் நடைபெற்ற மூன்று நிகழ்வுகள்



வருடத்தில் நான்கு முக்கிய பருவங்கள் இருந்தாலும் வசந்தகாலம் வருமோ? நிலை மாறுமோ? என்பதுதான் ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோரின் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி, விம்பிள்டன், பாரீஸ் நெடுந்தூர சைக்கிள் ஓட்டப் போட்டி உட்பட எண்ணற்ற சுற்றுப் பிரயாணங்கள் வரை யாவுமே நடைபெற்றன. ஏனோ தெரியவில்லை விடுமுறை ஆரம்பித்து விட்ட செய்தியை சூரியன் மட்டும் அறிந்து கொள்ளாதது போல வானம் கசிந்தபடியே இருந்தது. ஆயினும் அடாது மழை பெய்தாலும் காரியங்களெல்லாம் விடாது நடந்தபடியே இருந்தன. அந்த வகையில் ஜேர்மனியில் நடைபெற்ற மூன்று நிகழ்வுகள் அவதானிப்பிற்குரியதாய் இருந்தன.

## ஜேர்மனியில் நடைபெற்ற நூல் வெளியீடு!

ஒரு அகதி உருவாகும் நேரம், கிழக்கு நோக்கி சில மேகங்கள் ஆகிய இரண்டு நூல்களை வெளியீடு செயவதற்கு பொ.கருணாகரமூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார். ஐரோப்பிய நாடுகள் முதல் இந்தியா வரை பல எழுத்தாளர்கள், கலைஞர்கள் பங்கு பற்றுவதாக இருந்தது. ஆரம்பத்தில் வருவதாக ஒப்புக்கொண்ட பலர் வராது போக, மேலும் பல புதியவர்களை இணைத்துக்கொண்டு புத்தக வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். தொடக்கத்தில் உரையாற்றியவர்கள் நெடுநேரம் மெய்மறந்துபேச சங்கீதக் கச்சேரி இருந்தமையால் பின்பு வந்தவர்கள் சுருக்கமாகப் பேசவேண்டியேற்பட்டது. எனினும் ஏற்புரையில் கருணாகர மூர்த்தி கூறிய கதை சிந்தனையைத் தூண்டுவதாயிருந்தது.

“நான் பேர்ளின் நகரில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறேன். பலர் என்னை அறிந்திருப்பினும் எழுத்தாளரென நம்பியவர்கள் குறைவு. என்னைக் காணும் பலர் உம்முடைய பெயரில் பேர்ளினில் ஓர் எழுத்தாளரும் இருக்கிறார். அவருடைய கதைகளை நாங்கள் அடிக்கடி படித்து வருகிறோம் என்று என்னிடமே கூறுவார்கள். நீங்கள் கூறும் எழுத்தாளர் கருணாகரமூர்த்தி வேறு யாருமல்ல நானேதான் என்பதை தமிழ் நெஞ்சங்கள் அறிய வேண்டுமென எண்ணி, நூல் வெளியீட்டு விளம்பரத்தில் எனது புகைப்படத்தைப் பதித்து சகல தமிழ்க் கடைகளிலும் வைத்திருந்தேன். ஒரு வாரம் கழித்துச் சென்று பார்த்தபோது சகல துண்டுப்பிரசுரங்களும் அமோகமாகப் பறந்திருப்பதையறிந்து மகிழ்ச்சியடைந்தேன். கடைக்காரர் மேலும் துண்டுப் பிரசுரங்களைக் கேட்டது மனதிற்கு தெம்பாக இருந்தது. மக்கள் நூல் வெளியீட்டில் ஏன் இவ்வளவு அக்கறைப்படுகிறார்களென்பதை அவர்களிடமே விசாரித்தேன் பதில் அதிர்ச்சி தந்தது. பலர் எனது புகைப்படத்தைக் காட்டி இந்த மனிதர் எப்போது காலமானாரெனக் கேட்டிருக்கிறார்கள். வேறு சிலர் இறுதிக் கிரியைகளை அறிவிக்கும்படி கூறி, துண்டுப் பிரசுரங்களை மரக்கறிப் பைகளில் அடைந்து சென்றதையும் அறிய முடிந்தது. இதுதான் புலம்பெயர்ந்

தோரிடையே நூல் வெளியீட்டின் நிலை" என்றார்.

## பரத நாட்டிய அரங்கேற்றம்

ஜேர்மனியில் ஒபகௌசன் நகரில் திருமதி.சாவித்திரி இமானுவேலின் மாணவி செல்வி கௌசிகா முருகரட்ணத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. இதுவே இந்த நகரில் நடைபெறும் முதலாவது அரங்கேற்றமென அறிய முடிந்தது. பரத நாட்டியம் பயில்வதும் அரங்கேற்றம் நடத்துவதும் தவிர்க்க முடியாத ஒன்றென நினைக்குமளவிற்கு அரங்கேற்றங்கள் பெருகிச் சென்றாலும்; ஆங்காங்கே சில இடங்களில் நடைபெறும் அரங்கேற்றங்கள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருப்பதுண்டு அதில் இந்த அரங்கேற்ற நிகழ்வையும் ஒன்றெனக் கூறமுடியும். ஜேர்மனியில் பல நடன நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்தி, வாழ்வை ஈகம்புரிந்த சுஜீத்தா நினைவரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றதும், மண்ணின் மகத்துவத்தை நினைவு கூரும் பாடல்கள் இணைக்கப்பட்டிருந்தமையும் புதிய வடிவத்தைத்தருவதாயிருந்தது. அரங்கேற்றமென்பது பரதத்தின் முடிவல்ல; அதுவே கற்கையின் முதற்படி என்ற புரிதலுடன் காரியங்கள் நடைபெற்றன.

## ஈழமுரசு நடாத்திய நாடகப் போட்டி

ஈழமுரசு நடாத்திய மூன்றாவது நாடகப்போட்டி எசன் நகரில் நடைபெற்றது. ஆறு நாடகங்கள் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் இறுதியில் நான்கு நாடகங்களே மேடையேறின. எனினும் நான்கு நாடகங்களிடையேயும் கடுமையான போட்டி நிலவியது. 70–களிலும் 80 களின் ஆரம்பத்திலும் தமிழீழத்தின் பெருநகரங்கள் முதல் சிறு கிராமங்கள் வரை நடைபெற்ற நாடகப் போட்டிக் காலத்தை நினைவுபடுத்துவதாக இருந்தன நாடகங்கள். உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தின்



இறுதிப் போட்டி நடைபெற்றாலும் அரங்கு நிறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசின் முன்னாள் ஆசிரியரும் சிறந்த பத்திரிகையாளருமான கப்டன் கஜன் நினைவரங்கில் போட்டிகள் நடைபெற்றன. ஒருவரையொருவர் சந்திக்க முடியாதபடி இரவும் பகலுமாக வரும் வேலை நேரங்கள், தொலைதூர நகரங்களில் வாழும் நிலைபோன்ற தடைகளுக்கிடையிலும் ஒவ்வொரு குழுவினரும் பெரும் எண்ணிக்கையில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் சகிதம் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது. முக்கியமாக அதிகமாகப் பெண்கள் கலந்து கொண்டதும் இயற்கையாக நடித்தமையும் பாராட்டப்பட வேண்டியதாக இருந்தது. ஜேர்மனியில் நடைபெற்ற நாடகப்போட்டியானது நடிப்பிலும், தாயாரிப்பின் தரத்திலும் கலைஞர்களிடையே குறிப்பிடக்கூடியளவு வளர்ச்சியை ஏற்படுத்த உதவி வருகிறது என லாம். நாடகங்களிலே அவ்வப்போது பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இனியாவது ஐரோப்பிய நாடுகளில் நாடகப் பயிற்சிப் பள்ளிகளை தாமதிக்காது ஆரம்பிக்க வேண்டும் என்பதையே இப்போட்டிகள் எமக்கு வலியுறுத்திக் கூறியிருந்தன.

## முன்னேற்றம்

எழுத்தாளர் ஒருவரும், அவரைப் பார்க்க வந்திருந்த ஒரு நண்பரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எழுத்தாளர் சொன்னார்- நான் ஆரம்ப காலத்தில் வாசகர் கடிதம்தான் எழுதிக்கிட்டிருந்தேன்.

பிறகு....?

பிறகுதான் கேள்வி பதில் பகுதிக்கு கேள்வி எழுத ஆரம்பிச்சேன்.

ஓஹோ!

அஞ்சு வருஷத்துக்கு அப்புறம்தான் துணுக்கு எழுத ஆரம்பிச்சேன்.

பரவாயில்லையே...

கொஞ்சம் பிரபலமானதும் சொந்தமா ஜோக் எழுதினேன்.

நல்ல முன்னேற்றம்தான்.

அதுக்குப் பிறகு நாவல் எழுதினேன். இப்ப ஒரு நாலு வருஷமாத்தான் தொடர்கதை எழுத ஆரம்பிச்சேன்.

வந்திருந்த நண்பர் எல்லாத்தையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு இப்படிச் சொன்னார்-

அப்போ இருபது வருஷமாக் கடுமையா உழைச்சு படிப்படியா முயற்சி செஞ்சு இப்போ சொந்தமா "பழைய பேப்பர்" வியாபாரம் பண்ற அளவுக்கு முன்னேறியிருக்கீங்கன்னு சொல்லுங்க.....!

# தவளைக்கு மலசல கூடம்! ஓணானுக்கு லெதர் ஜாக்கட்!



உலகமெங்கும் அகதிகளாக்கப்பட்டு வீதிகளிலும், சிறு சிறு கூடாரங்களிலும் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளற்றுப் படும் துயரங்களை நாமறிவோம். ஆனால் இங்கு சில மேலை நாட்டுக் காரர்களுக்கு அவைபற்றி எந்தவித அக்கறையும் கிடையாது. அவர்களின் பிரச்சினைகள் வேறு வேறாக உள்ளன. டெனி,சோன்யா என்ற இரு ஐரோப்பியத் தம்பதியர் கொஸ்பி என்ற தவளையை ஆசையாக வளர்த்து வருகிறார்கள். அவர்கள் போடும் உத்தரவுகளையெல்லாம் ஓடியோடிச் செய்யும் தவளை மீது அவர்களுக்கு கொள்ளை விருப்பம். ஒருநாள் மலசலகூடத்தின் குழிக்குள் விழுந்து காணாமலே போய்விட்டது கொஸ்பி. சோன்யாவால் அந்தக் கவலையைத் தாங்கவே முடியவில்லை. இரண்டு நாட்களின் பின் கொஸ்பியை வீட்டின் பின்புறத்தில் கண்டுபிடித்தார்கள். அதன் பின்னர் சொன்யாவின் கணவரான டெனி தவளைக்காக அழகான மாளிகையொன்றைக் கூட்டியுள்ளார். அதெற்கென தனியான மலசலகூடம், படுக்கறையறை யாவும் அமைத்திருக்கிறார். பிள்ளைகள் இல்லாத கவலையை இவர்கள் கொஸ்பியை வளர்ப்பதில் மறந்துவிடுகிறார்கள். இப்போது மலசலகூடத்தைப் பாவிக்கும் உலகின் முதல் தவளை என்ற பெயர் கொஸ்பிக்குக் கிடைத்துள்ளது.



இதுபோல "ELYPET SUPPLIES" என்ற இங்கிலாந்து நிறுவனம் ஓணான்களுக்காக லெதர் ஜாக்கட்டுக்களைத் தயாரித்துள்ளது. வீட்டில் ஓணான்களை வளர்க்கும் பழக்கம் தற்போது ஐரோப்பியரிடையே பெருகிவருகிறது. இதைக் கருத்தில் கொண்டு இந்த ஜாக்கட்டுக்களைத் தயாரித்துள்ளனர். வெப்பவலய நாடுகளில் வாழும் ஓணான்களை ஐரோப்பியாவில் வளப்பதனால் குளிர்காலத்தில் அவைகளுக்கு தோல் ஜாக்கட்டுக்களை அணிவிப்பது நல்லது என்கிறார்கள்.





நீங்களும் ஓணானோ அல்லது அணிலோ வளர்க்கிறீர்களா ஒரு ஜாக்கட்டின் விலை 15 பவுண்ஸ்கள் மட்டுமே.

# எழுத்தாளர்களிடம் சில பொறுப்புக்கள்

பாலம் சஞ்சிகையில் பல தரப்பட்ட விடயங்களையும் வெளியிட இருப்பதால் எழுத்தாளர்களிடம் இருந்து ஆக்கங்களை பாலம் சஞ்சிகை எதிர்பார்த்து நிற்கின்றது. கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற விடயங்களில் ஆர்வம், அனுபவம் உள்ளவர்கள் பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியவாறான கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

கட்டுரைகள், சிறுகதைகள் கணணியில் எழுதப்பட்டதாயின் 12 Pt-இல் 2,3 பக்கங்கள் [A4] – கையால் எழுதப்பட்டவையாயின் 3, 4 பக்கங்கள் [A4].

சிறிய கட்டுரைகள் ஒரு பக்கத்தில் கணணிப்பதிப்பு அல்லது இரண்டு பக்கங்கள் கையால் எழுதப்பட்டவை. இவை தவிர பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியதென நீங்கள் கருதும் விடயங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

ஓவியங்கள் வரையக்கூடியவர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு உங்களது ஆக்கங்களை வெளிக்கொணரவும்.

“கேட்டோம் சொன்னார்கள்” என்னும் பகுதியில் முக்கிய நபர்களை சந்தித்து “பாலம்” வாசகர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். எனவே நீங்களும் கலை, அரசியல், இலக்கிய, விளையாட்டு, வைத்திய, பொறியியல் துறை சார்ந்தவர்களாக இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

PALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST: TV
7430 IKAST
DENMARK
Fax: 45 97 25 22 96

முழுப்பெயர்:–.............................................................................................

முகவரி: –.....................................................................................................

.....................................................................................................

தொலைபேசி: –.............................................................................................

சார்ந்த துறை:– ..........................................................................................

குறிப்பு: –

# பொது அறிவுப் போட்டி இல: 5

பாலம் சஞ்சிகை நிறுவனத்தினரால்நடாத்தப்படும் அறிவுப் போட்டி இல—5. ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். தொடர்ந்து நடைபெறும் 10 அறிவுப்போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வாசகர்களுக்கு பாலம் சஞ்சிகையினரால் சிறந்த பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெறும் பட்சத்தில் குலுக்கல் முறையில் வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகளை கீழே உள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவும்.

## கேள்விகள்:

1– நிமோனியா நோய் எந்த உறுப்பைப் பாதிக்கும்?

2– மன்னார் மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய குளம் எது?

3– அடிக்கடி யானை காதுகளை அசைப்பதைப் பார்த்திருக்கிறோம். அப்படி அசைக்காவிட்டால் என்ன ஆகும்?

4– கடலோர நிலவுருவ அமைப்புக்களில் முக்கியமான அம்சம் முனை ஆகும். பூநகரியில் உள்ள முனையின் பெயர் யாது?

5– 1945–ம் ஆண்டு அமெரிக்காவினால் குண்டு வீசி, ஜப்பானின் இரு நகரங்கள் அழிக்கப்பட்டன அந்நகரத்தில் இருந்த லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த நகரங்களின் பெயர் என்ன?

---

## பொது அறிவுப் போட்டி இல:5

பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்ற திகதி:– ..........................

விடைகள்:

1 ..................................................

2 ..................................................

3 ..................................................

4 ..................................................

5 ..................................................

பெயர்:– ....................................

முகவரி:– ....................................

....................................

....................................

தொலைபேசி இல.:– ..........................


கலையும் மக்களும்

# நரம்புக் கருவிகளில் ஒன்று
# தம்புரா

சுருதிக் கருவிகளில் மிகச் சிறப்புற்றது தம்புரா ஆகும். இதன் சிற்பம் திருமயத்திலுள்ள பெருமாள் கோவிலில் காணப்படுவதிலிருந்து இக்கருவி தென்னிந்தியாவிலேயே முதன் முதல் தோன்றிற்று எனலாம். தும்புரு கையாண்ட கருவி என்பதால் தம்புரா என்று பெயர் வந்திருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இக் கருவியைத் தம்பூரா, தம்பூரி, தம்பூரு, தம்பூர் என்றும் அழைப்பதுண்டு.

நன்றாக சுருதி சேர்த்துள்ள தம்புராவில் அந்தர காந்தாரமும், சதுசுருதி ரிஷபமும் ஒலிப்பதை நாம் கேட்க முடியும். நன்கு சுருதி சேர்த்துள்ள தம்புராவை மீட்டுவதால் மனத்தை ஒன்றுபடுத்தி இறைத்தியானத்தில் ஈடுபடுவோரும் உண்டு. அரங்கிசையில் மேளக் கட்டு ஏற்படவும் இது உதவுகிறது.

தம்புரா பலா மரத்தினால் செய்யப்படுகிறது. முதலில் சதுரமாக உள்ள ஒரு பலாத்துண்டை எடுத்து மேல் பாகத்தை செதுக்கி அரை கோள வடிவமாக்கி, பின் உள் பாகத்தை எடுத்துவிட்டு 'குடம்' என்ற இசையொலி பெருக்கும் பகுதியைத் தயார் செய்வர். பின் 'தண்டி' என்ற நீண்ட பகுதியைத் தயார் செய்து குடத்துடன் பிணைப்பர். குடத்தின் மேலுள்ள மெட்டு (Bridge) அகலமாகவும் குடத்தின் மேல் செம்மையாய்ப் பதிந்தும் இருக்கும். குடத்தின் வலது ஓரத்திலுள்ள தந்தி தாங்கியில் 4 தந்திகள் பிணைக்கப்பட்டு, உருண்டைவடிவமாக உள்ள மணிக்காய்களின் துளைகள் வழியாக மெட்டின் மேல் சென்று, பிறகு மேரு பாகத்திலுள்ள மற்றொரு மெட்டின் நடுவில் உள்ள சில துளைகள் மூலமாகச் சென்று பிரடைகளில் சுற்றப்பட்டிருக்கும்.




சுருதி செம்மையாகக் கூட்டப்படுவதற்காகக் குடத்தின் மேல் உள்ள மெட்டுக்கும் தந்தி தாங்கிக்கும் நடுவில் 4 மணிக்காய்கள் உள்ளன. இவற்றைத் தந்தி தாங்கியின் பக்கமாகத் தள்ளினால், சுருதி அதிகரிக்கும், எதிர்ப்புறம் தள்ளினால் சுருதி குறையும். ஒலி கணீரென்று கேட்பதற்காக 'ஜீவாளி' என்று சொல்லப்படும் பட்டு நூல் அல்லது கம்பளி நூல் துண்டுகள் மெட்டுக்கும் தந்திக்கும் இடையில் தக்க இடத்தில் வைக்கப்படும்.

மிராஜ் தம்புராக்களிலும், வடநாட்டுத் தம்புராக்களிலும் பலா மரக் குடத்திற்குப் பதிலாக சுரைக் காயைச் சுத்தப்படுத்திப் பயன்படுத்துவர்; தண்டி தேக்கு மரத்தினால் சற்று அகலமாகச் செய்யப்பட்டிருக்கும்.

தம்புராவை நிறுத்தி வைத்துக் கொண்டும் படுக்க வைத்துக் கொண்டும் வாசிக்கலாம். 4 தந்திகளும் ப ச ச ச என்ற சுரங்களுக்குச் சுருதி சேர்க்கப்படும். 4 தந்திகளுக்கும் முறையே பஞ்சமம், சாரணி, அனுசாரணி, மந்தரம் என்று பெயர் உண்டு. ஆள்காட்டி விரலினால் தம்புராவின் தந்திகள் மீட்டப்படும். தம்புரா மீட்டுவதிலும் ஒரு தாளக் கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

பாச ச சா;/ , பச ச சா//

மத்திம சுருதியில் பாடுவதற்குத் தம்புராவின் பஞ்சமத் தந்தியைச் சுத்த மத்தியமத்திற்குச் சுருதி கூட்டி மீட்ட வேண்டும். அப்பொழுது மத்தியமமே ஷட்ஜமாகிவிடுகிறது. தம்புரா தந்திகளை நடுவிலோ அல்லது 2/3 நீள ஸ்தானத்திலோ மீட்ட, ஒலி இனிமையாக இருக்கும்.

இரட்டைத் தம்புராக்கள் பயன்படுத்தினால் அவற்றை 3 வகைகளில் சுருதி கூட்டலாம்:

1– 2 தம்புராக்களும் ஒரே சுருதியில்: ப ச ச ச

2– ஒரு தம்புரா வழக்கம்போல் சுருதி சேர்க்கப்பட்டும், மற்றொன்றில் பஞ்சமத்துக்குப் பதில் காகலி நிஷாதத்துக்குச் சுருதி சேர்த்தும் மீட்டலாம்: நி ச ச ச

காகலி நிஷாதம் பஞ்சம தந்தியின் பரிவார சுருதியாக இருப்பதால் கேட்பதற்கு இனிமையாக இருக்கும், (கைசிகி நிஷாதம் உள்ள இராகங்களைப் பாடினாலும்).

3– ப ச ச ச ச ப ப ப .

_பைரவி_

# மதுவால் மடிந்த தமிழ்க் கவிஞர்!

"அவரிடம் கவிதை படிக்கச் சென்றேன் கடைசியில் குடியையே பழகிக் கொண்டேன்" - நடிகர் வி.கே.ராமசாமி

## கம்பதாசன்!

'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு' என்ற பாடலைக் கேட்டால் நம் கண்முன்னே மதுக் கோப்பையும் கண்ணதாசனும் வந்துவிடுவது தவிர்க்க முடியாதது. உலகத்திலேயே தமிழ் மொழியில் இருப்பது போல பக்திப் பாடல்கள் வேறு எந்த மொழியிலுமே காணமுடியாதிருக்கிறது. சமூகவியல் வாழ்வில் விடிவு கிட்டாத போது பக்தியில் விடிவைத் தேட வேண்டிய நிலை அவர்கள் வாழ்வை விரட்டியது. "பெற்றது கொண்டு சுற்றும் ஓம்பி" வாழும் வாழ்விற்கு மேலாக தமிழ்க் கவிஞர்களின் வாழ்வு செழிப்படைந்ததாகக் கூறமுடியாது. அரசன் எழுச்சி பெற்றிருந்த காலத்தில் அரசனையும், சமயம் பெற்றிருந்த காலத்தே சமயத்தையும் சினிமா உச்சத்திலிருந்த காலத்தில் சினிமாவையும் அவர்கள் ஆதரித்திருக்கிறார்கள். எனினும் கவிஞர்கள் தம் நடைமுறை வாழ்வை வெற்றி கொண்டது தமிழில் மிகமிகக் குறைவென்றே கூறவேண்டும். இவர்களிடமிருந்த விரக்தியின் இடைவெளியைக் கைப்பற்றிக் கொண்ட மதுவே அவர்களின் வாழ்வையும் சூறையாடியிருக்கிறது. இதுபற்றி கவிஞர் கண்ணதாசன் தானாகவே முன்வந்து தன்னைப் பற்றியே நிறைய எழுதியிருக்கிறார்.

அந்த வகையில் திரைப்படத் துறையைச் சேர்ந்திருந்த கவிஞர் கம்பதாசனின் வாழ்வும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதாகும்.

மகாகவி பாரதியாரின் கவிதைகளுக்குப்பின் சமூகப் பிரக்ஞையும் கருத்தாக்கமும் உடையவை கம்பதாசனின் கவிதைகளாகும். உவமையழகு, புதுமைநயம், வார்த்தை எளிமை இவற்றில் தமக்கென ஓர் புதுப்பாணியை உருவாக்கியவர் கம்பதாசன். 1941–ல் இவரது கனவு என்ற கவிதைத் தொகுதி வெளிவந்தது. தொடர்ந்து முதல் முத்தம், வீதியின் விழிப்பு, அருணோதயம், புதுக்குரல் எனப் பல தொகுதிகள் வெளிவந்தன. 1960–ல் கம்பதாசன் கவிதைகள் என்றும் ஓர் தொகுப்பு வெளியானது. இவ்வளவு தொகுதிகள் வெளியானபோதும் இவரை மக்கள் மத்தியில் பெருமளவிற்கு எடுத்துச் சென்றவை இவருடைய சினிமாப் பாடல்களே "கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே" "கண்ணில் விளையாடும் இன்பக் காதல் கனவே வா!" போன்ற பாடல்களைக் கேட்டால் கம்பதாசனை இலகுவாக நம் நினைவிற்குள் கொண்டு வரலாம். 1940–ல் வாமன அவதாரம் என்ற படத்திற்குப் பாட்டெழுதி 1970–ல் குமார சம்பவம் வரை ஏராளமான சினிமாப்பாடல்களை எழுதிக் குவித்தவர். சினிமாவினால் சீமானைப்போல வாழ்ந்து, மதுவால் தன்னை அழித்துக் கொண்டு வறுமையால் வாடி 1973–ல் மரணமடைந்தார். பாரதியார் இறந்த போது அவரது இறுதிக் கிரியைக்கு மொத்தம் 17 பேர் வந்தார்கள். ஆனால் 1973–ல் கம்பதாசன் இறந்த போதோ சவக் கட்டிலைத் தூக்க நாலு பேர் கூட வந்து சேரவில்லை. மூன்றே மூன்று பேர் மட்டுமே வந்திருந்தார்கள். இந்தளவு தூரம் அவரின் வாழ்வை நாசம் செய்தது மது. "கம்பதாசனின் வாழ்க்கை அவரே பாழ்படுத்திக் கொண்ட ஒன்று" எனக் கூறி வருத்தப்படுவார் கலைஞர்.மு.கருணாநிதி.

கம்பதாசன் பாண்டிச் சேரிக்கு அருகில் உள்ள வில்லியக்காரனூர் என்ற இடத்தில் பிறந்தவர். சிறு வயது முதலே சென்னையில் வாழ்ந்து வந்தவர். 'அப்பாவு' என்பது இவரது இயற்பெயர். பின்னர் சி. எஸ். ராஜப்பா என தனது பெயரை மாற்றிக் கொண்டாலும் கம்பதாசன் என்ற பெயரே இவரை நிலைநிறுத்திவைத்தது. இவருக்கு கவிதை எழுதும் உந்துதலைத் தந்தது காதல். சித்ரா என்ற பெண்ணைக் காதலித்துப் பிரிந்த சோகம்,

பிறகு தேனாம் பேட்டையில் உள்ள கிறிஸ்தவ ஆசிரியை ஒருவர் மேல் கொண்ட காதல் இவைகள் எல்லாம் இணைந்தே இவரது கனவு கண்ட காதல் கவிகளை உருவாக்கியிருக்கிறது. காதல் தோல்விக்கு மதுவும், பின் மது தந்த போதையில் கவியுமாக வாழ்ந்தார். மதுவருந்தித் தகராறு செயதமையால் சைதாப்பேட்டை பொலிசில் அடைக்கப்பட்ட அனுபவங்களும் இவருக்குண்டு. இவ்வேளை இவரை பிணையெடுத்து வந்தவர் வேறுயாருமல்ல. பாவேந்தர் பாரதிதாசன்தான். இவருடைய வாழ்வும் நாம் அறிந்ததற்கப்பால் கம்பதாசனைப் போல தனியாகப் பார்க்கப்பட வேண்டியதே.

"எதற்காக அந்தக் குடிகாரனோடு தினமும் சுற்றுகிறீர்கள்?" என்று தன் மனைவி ஒருமுறை தன்னைத் திட்டியதாக எழுதியிருக்கிறார் க.நா.சு. அந்தக் குடிகாரன் வேறு யாருமில்லை கம்பதாசனே தான். மேலும் கம்பதாசனிடம் கவிதை எழுதிப் பழகச் சென்ற நடிகர் வி.கே.ராமசாமி கூறும் போது, "நான் அவரிடம் கவிதையைப் பழகச் சென்று கடைசியாக குடிப்பழக்கத்தைத்தான் கற்றுக் கொண்டேன். எப்போதும் ஜின்னையே விரும்பி அருந்துவார். அவரைப் போன்ற மது பக்தரை என் வாழ்நாளில் சந்திக்கவே இல்லை. குடித்துவிட்டு அற்புதமான கவிதைகளை எழுதுவார். ஆனால் குடிப்பழக்கமே அவரது வாழ்வு சீர்குலைந்துபோகக் காரணமானது" என்கிறார்.

கதர் ஜிப்பா, வேஷ்டி, தோளில் பட்டுச் சால்வை சகிதமாய் மிகவும் கம்பீரமாய்க் காட்சியளிக்கும் கம்பதாசன் கவிஞர் மட்டுமல்ல, சிறந்த சங்கீத ஞானமும் உடையவரும் கூட தமிழக அரசால் கோட்டூர் புரத்தில் வீடும், மாதா மாதம் உதவித் தொகையும் வழங்கப்பட்டாலும் கம்பதாசனின் மதுப்பழக்கம் அவரது வாழ்வைச் சூறையாடியது. கம்பதாசன் இறக்கும் போது கூறிய வரிகள் இவை "இன்று என்னை வறுமையில் ஆழ்த்தி என் வாழ்வைக் குலைத்த சிறு நரிகள் கூட்டம் நான் இறந்த பிறகாவது என்னை உண்மைக் கவிஞன் என ஏற்குமானால் அவர்கள் அறியாமையை மன்னிப்பேன் அப்போதே என் ஆத்மாவும் சாந்தியடையும்" என்றார்.

"மின்னல் போலாகும் உந்தன் வாழ்க்கையே
வானவில் போலும் இளமை ஆனதே– ஆம்
துன்பக் கதை உனதே"

என்ற கவி வரிகளும் அந்த மதுவால் மறந்த கவிஞருடையதே. எனினும் இன்றைய மதுக் கவிஞர்களுக்கு இவரது வாழ்வு ஓர் முன்னுதாரணம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

# எருமைகளிடம் பயிற்சிபெற்ற றகர் வீரர்!



றகர் விளையாட்டில் வெற்றிபெற வேண்டுமானால் எல்லோரையும் இடித்து விழுத்தி, பந்துடன் மறுகரைக்குச் செல்லும் பலமும்; ஓட்ட வேகமும் வேண்டும். இதன் பொருட்டு 'றகர்' விளையாட்டு வீரர்களுக்கு பல வகையான பயிற்சிகளை வழங்குகிறார்கள். ஆனால் பிரான்சிலுள்ள ஜோசப் என்ற றகர் வீரர் தற்போது புதிய சாதனை படைத்துள்ளார். இவர் எருமை மாடுகளுடன் மோதி அவைகளைத் தள்ளிவிழுத்திப் பயிற்சிபெற்றுக் கொண்டார். இவர் கையில் பந்தை எடுத்துவிட்டாலே போதும் நேரடியாக மறுகரைக்குப் போய்விடுகிறார். எருமை மாடுகளையே தள்ளிவிழுத்தும் இவரின் முன்னாள் மனிதர்கள் எம்மாத்திரமே? மாடுகள் இருக்கும் போது மனிதர்கள் எதற்கு? என்று கோபமாகக் கேட்கும் ஜோசப்பைக் கண்டால் பயிற்சியாளர்களே நடுங்குகிறார்களாம்.



# ராடர் கண்டுபிடித்த ஆலயம்




கம்போடியாவின் அடர்ந்த காட்டுப் பகுதியிலே ஓர் இந்து ஆலயத்தைக் கண்டு பிடித்திருக்கிறது ராடர் கருவி. சுமார் 160 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட மக்கள் வாழும் பகுதியில் மையத்தில் இந்த ஆலயம் இருந்திருக்கிறது. இங்கு வாழ்ந்த மக்கள் யார்? எதற்காக இந்த ஆலயத்தைக் கட்டினார்கள் என்பன போன்ற தகவல்களை இனித்தான் கண்டுபிடித்தாக வேண்டும். ஆனால் தமிழகத்தில் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருங்கோயிலை கட்டிய காலத்தில்தான் இக் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. கட்டிய அமைப்பு முறையும் மூலப் பொருட்களும் 12–ம் நூற்றாண்டிற்குரியவையாக உள்ளன. இக்கோயில் மிகவும் பிரமாண்டமானதாக உள்ளது. கோயில் குடியிருப்பை அடிப்படையாகக் கொண்ட சுற்று மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. இதுபோல கம்போடியாவின் நடுப்பகுதியில் உள்ள காடுகளில் சிறிதும் பெரிதுமாக ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இருக்கலாமென நம்பப்படுகிறது. மறைந்து கிடக்கும் இந்த ஆலயங்கள் பண்டைத் தமிழரின் கடல்கடந்த வரலாற்றுடன் தொடர்பட்டவையா என்பது தெரியவில்லை.

# பொதுத் தொலைபேசிப் பெட்டிகளின் கலாச்சாரம்



புதிய புதிய சற்லைற்றுக்களின் வருகையால் தொலைபேசிக் கட்டணங்கள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. தொலைபேசி ஸ்தாபனங்கள் எத்தனையோ விளம்பர வித்தைகளைக் கையாண்டு மக்களைப் பேசவைத்து பணம் கறந்து விடுகின்றன. அந்தவகையில் பொதுத் தொலைபேசிப் பெட்டிகளும் கவர்ச்சிகரமாக அமைய வேண்டியது அவசியம். உலகளாவிய ரீதியில் பொதுத் தொலைபேசிப் பெட்டிகளுக்கான கலாச்சாரம் ஒன்று நிலவிவருகிறது. அந்த வகையில் உலகின் சிறந்த வடிவமைப்பாக உள்ள மூன்று நாடுகளின் தொலைபேசிப் பெட்டிகளை இங்கே காண்கிறீர்கள். முதலாவது அராபிய வடிவமைப்பு, இரண்டாவது சீன வடிவமைப்பு, மூன்றாவது வெனிஸ் நகரத்தில் உள்ளது. இதுபோன்ற பல நாடுகளின் வடிவமைப்புக்களை வைத்திருக்கும் டெனிஸ் பொறியியலாளர்கள் விரைவில் ஓர் புதிய வடிவத்தை அறிமுகம் செய்ய உள்ளார்கள்

# கிளிகள் ஏன் பேசுகின்றன



காகம் அறிவுள்ள பறவை என்பதுபோல கிளிகள் பேசுவதில் வல்லமையுள்ள பறவை யினமாகும். பறவைகளின் வாழ்வை ஒற்றறிந்து அதுபற்றிய தகவல்க ளைத் தருவோரின் கணிப்பின்படி கிளிகள் மிகவும் சோசலிசமான உணர்வுடைய பறவைகளாக உள் ளன. எப்போதும் கூட்டமாகவே வாழ விரும்பும். ஒன்றோடொன்று அலகுகளால் மோதிக்கொண்டு உரையாடும். இதற்காக விஷேட ஒலிகளை தமக்குள் எழுப்பிக் கொள்ளும் வல்லமை பெற்றிருக் கின்றன. இவை தாம் வாழும் கூட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, மனிதர்களுடன் கூட்டில் வளர்க் கப்படும்போது அவைக்கு காண்ப தெல்லாம் மனிதர்களாகவே இருக் கும்; எனவே தானும் மனிதனைப் போல உருவமுடையதாக கருதி, மனிதர்களுடன் பழக முற்படுகி றது. அவ்வேளை மனிதன் கூறும் சொற்களை கிளியும் திருப்பிக் கூறு கிறது. ஆனால் இவை சொல்லிக் கொடுக்கப்பட்டவற்றையே சொல் லக் கூடியவை. அதவேளை அமே சன் பகுதியில் வாழும் பஞ்சவர்ணக் கிளிகள் விஷேடமானவை. இவை ஒரு வசனத்தையே சொல்லி முடிக் கக்கூடிய வல்லமை உடையவை.



# தேசிக்காய்த் திருவிழா



பல்லாயிரக்கணக்கான தேசிக்காய்களைச் சேகரித்து இந்த வேடிக்கையான திருவிழாவைச் செய்திருக்கிறார்கள். மனாகோவில் உள்ள நகரத்தில் அங்கு வாழ்ந்த வீரர்களின் குடும்பங்களின் 700 ஆண்டு நினைவாக இந்த அலங்காரங்களைச் செய்தி ருந்தனர். தேவாலயம், படகு, நீர்மூழ்கிக் கப்பலென பல்வேறு வடிவங்களில் இக் கண்காட்சி உருவங்கள் செய்யப்பட்டிருந்தன. சுமார் 300 மனிதர்கள் ஒன்றிணைந்து இரண்டு வாரங்களாக முயற்சித்து இந்தத் தேசிக்காய்களின் அலங்காரத் திருவிழாவைச் செய்திருக்கிறார்கள்.




# 2000-ம் ஆண்டில்

**உலகத்தை அழிப்பதானால் ஒன்று செயற்கையாக அல்லது இயற்கையாக அழித்தல் முடியும். செயற்கையாக உலகை அழிப்பதானால் அணுப் போர் ஒன்றினால் முடியும். ஆனால் அதற்கானதேவை கட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இதற்கு அப்பால் மனிதனால் நடத்தி முடிக்கப்பட்ட அழிவுகளை நோக்கினால் இந்த நூற்றாண்டில் இரு பெரும் உலக யுத்தங்களை நடத்தி, அணுகுண்டை வீசியதுவரை மனிதன் போரிட்டிருக்கிறான்.**

இரண்டாயிரம் ஆண்டில் உலகம் அழியப் போகிறதாம் கேள்விப்பட்டீர்களா? இப்படியொரு கேள்வியைக் காதில் விழுத்திக் கொள்ளாத தமிழரை எங்காவது தேடிப்பிடிக்க முடியுமாவென்றால் உண்மையில் அது இயலாத காரியமே. அந்தளவிற்கு இக் கேள்வி நம்மிடையே கிளை பரப்பியுள்ளது. ஏன் உலகம் அழிய வேண்டும்? என்று கேட்டால் 2000-ல் எல்லாக் கிரகங்களுமே ஒரே நேர் கோட்டில் வருகிறதாம் என்கிறார்கள். அப்படி வந்தால் உலகம் அழியுமா? இந்தச் செய்தியை உத்தியோக பூர்வமாக வெளியீடு செய்தது யார் என்பதை யாருமே அறிந்திருக்கவில்லை; ஆனால் வேரில்லாத மரமாக இக்கேள்வி வளர்ந்து செல்வதை எவராலுமே தடுக்கவும் முடியவில்லை.

நொஸ்ரடாம் என்னும் காலம் சென்ற ஆரூடக்காரர் ஒருவர் உலகில் நடைபெறப் போகும் நிகழ்வுகளை முன்னெதிர்வு கூறக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார். இவருடைய பாடல்களில் முதலிரு உலக யுத்தங்களும் முன்னரே எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இனி உலகில் முஸ்லீம் அணிக்கும் கிறிஸ்தவ அணிக்குமாக பெரும் போரொன்று ஆரம்பிக்குமென்றும்; சுமார் முப்பதாண்டுகள் நடைபெறக்கூடிய இப் போரில் கிறிஸ்தவர்களே வெற்றிகொள்வார்கள் என்று இவர் பாடல்கள் தெரிவிப்பதாகக் கூறுகிறார்கள். மேலும் 2000 ஆண்டில் நடைபெறவுள்ள பேரழிவுகள் பற்றியும் இவர் பாடியிருக்கிறாரென சிலரும், இல்லை அப்பாடல்கள் தெளிவற்று இருக்கின்றன என்று வேறுசிலருமாக வாதிடுகிறார்கள். ஆனால் இக்கதையானது ஒரு பகுதியினருடைய வெற்றிக்கும் மறு பகுதியினருடைய தோல்விக்குமான உளவியல் காரணங்களை மனித மனங்களில் திட்டமிட்டு ஏற்படுத்தும் முயற்சியென நிராகரிப்பவர்களும் உண்டு.

உண்மையாக உலகத்தை அழிப்பதானால் ஒன்று செயற்கையாக அல்லது இயற்கையாக அழித்தல் முடியும். செயற்கையாக உலகை அழிப்பதானால் அணுப் போர் ஒன்றினால் முடியும். ஆனால் அதற்கான தேவை கட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இதற்கு அப்பால் மனிதனால் நடத்தி முடிக்கப்பட்ட அழிவுகளை நோக்கினால் இந்த நூற்றாண்டில் இரு பெரும் உலக யுத்தங்களை நடத்தி, அணுகுண்டை வீசியதுவரை மனிதன் போரிட்டிருக்கிறான். அதுபோல ருவண்டாவில் ஏற்பட்ட மனிதப் படுகொலைகள் ஓரிரு வாரங்களிலேயே பத்து இலட்சத்தை எட்டியது. இதுபோன்று சிறுபான்மை இனங்களை அழிக்கும் முயற்சி இலங்கை போன்ற நாடுகளில் இப்பொழுதும் நடைபெறுகின்றன. இருப்பினும் இவைகளுக்கும் உலக அறிவிற்கும் தொடர்பிருப்பதாகக் கூறமுடியாது. மேலும் இயற்கையால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை நோக்கினால் அண்மையில் பப்புவா நியூகினியின் கடலடிப் பகுதியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பானது பேரலைகளை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்களைக் குடித்தது. அதேபோல சீனாவில் ஒகஸ்ட்



# உலகம் அழியுமா?

மாதம் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் சுமார் 2000 பேர் வரை மடிந்தனர். பல இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். வங்காள தேசத்திலும் இதே நிலைதான். இந்த வகையில் கடந்த 25 ஆண்டுகளில் உலகில் ஏற்பட்ட மிகப் பெரிய இயற்கையின் பேரழிவுகளை முதலில் அவதானிப்பது அவசியம்.


## புவி நடுக்கத்தால் ஏற்பட்ட அழிவு

சுமார் 400 அணு குண்டுகளை ஒன்றாக வெடித்தால் எப்படியிருக்குமோ அப்படியொரு அழிவு 1976–ம் ஆண்டு சீனாவில் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தால் 240.000–ற்கு *மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள். 650.000 கட்டிடங்கள் இடிந்து சரிந்தன. நினைக்க முடியாத பெரும் பேரழிவு நிகழ்ந்தது. பூமிக்குக் கீழே நகர்ந்து கொண்டிருக்கும் ஆறு பிரதான பாறைத் தகடுகளும், பன்னிரண்டு உப தகடுகளும் மோதுவதாலும், பிரிவதாலும் இத்தகைய நில நடுக்கங்கள் உண்டாகின்றன. வருடந்தோறும் ஏறத்தாழ ஒரு மில்லியன் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் 20 வரையே பாரதூரமானவையாக இருக்கின்றன. அடுத்த மிகப் பெரிய நில நடுக்கம் இமயமலைச் சாரலையண்டியதாக நடைபெறலாமெனக் கூறப்படுகிறது.



## எரிமலை கக்கியதால் ஏற்பட்ட பேரழிவு

1985–ம் ஆண்டு கொலம்பியாவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பால் ஒரு நகரமே முற்றாக அழிக்கப்பட்டது. ஏறத்தாழ 20.000 மக்கள் கொல்லப்பட்டனர். 1975 முதல் 1985 வரை உலகில் சுமார் 300 எரிமலைகள் வெடித்துக் கக்கியுள்ளன. இவற்றில் எட்டே



யெட்டு மட்டுமே மிகப்பெரியனவாக இருந்தன. சற்லைற்றுக்கள் மூலம் எரிமலை கக்கப்போவதை அவதானிக்க முடியுமெனிலும் இதன் திடீர் தாக்குதலில் இருந்து தப்புவது இலகுவான காரியமாக இல்லை. அடுத்த எரிமலை தெற்குப் பசுபிக்கில் ஏற்படாலாம், என்று கணிப்புகள் கூறியிருந்தன. அதுவே அண்மையில் பப்புவா நியூகினியில் ஏற்பட்டிருக்கலாம்.

## வெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவு

1991-ம் ஆண்டு வங்காள தேசத்தில் நடைபெற்ற வெள்ளப்பெருக்கால் சுமார் ஒரு இலட்சம் மக்கள்



கொல்லப்பட்டனர். மத்திய கோட்டுப் பகுதியில் ஏற்படும் தாழமுக்கத்தால் ஏற்படும் சூறாவளி வங்காள விரிகுடா வழியாகத் தாக்குவது வருடா வருடம் நடைபெற்றுவருகிறது. சற்லைற் கணிப்புக்களின் படி மேலும் இரண்டு வருடங்களில் வங்காளத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாமெனக் கூறுகின்றன.

## காட்டுத் தீயினால் ஏற்பட்ட அழிவு

காட்டுத் தீ பற்றியும் அது பரவும் வேகம் பற்றியும் தமிழில் நாம் நிறையவே அறிந்திருக்கிறோம். அவுஸ்ரேலியாவில் உள்ள விக்டோரியா மாநிலத்தில் 1983-ல் ஏற்பட்ட காட்டுத்தீயால் 47 பேர் கொல்லப்பட்டனர். 2000 வீடுகள் எரிந்து சாம்பலாகின. சுமார் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள காட்டுப் பகுதி சாம்பலானது. காட்டுத்தீயைக்




கட்டுப்படுத்துவது மிகக் கடினமான பணியாகும். கனடாவில் மட்டும் வருடத்தில் 10.000 தடவைகள் காட்டுத் தீ பரவுகிறது. வருடாவருடம் உலகின் நிலப்பரப்பில் 5 வீதம் காடெரிவால் பாதிப்படைகிறது. அடுத்த காடெரிவு மத்தியதரைக் கடல் பகுதி, அவுஸ்ரேலியா, தெற்குக் கலிபோர்ணியா போன்ற இடங்களில் ஏற்படலாமெனக் கூறப்படுகிறது.

## புயலினால் விளைந்த அழிவு

1988-ம் ஆண்டு கரிபியன் பகுதியில் மோதிய புயலினால் 200 பேர் கொல்லப்பட்டனர். மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் வீசிய புயலினால் சுமார் ஒரு மில்லியன் மக்கள் தம் வீடுகளை இழந்தனர். சற்லைற் கணிப்புகளின்படி அடுத்த பெரும் புயல் கரிபியன் பகுதியையும், ஐக்கிய அமெரிக்காவின் தென் பகுதியின் மீதும் பாயலாமெனக் கூறப்படுகின்றன.

மேற்கண்ட இயற்கைத் தாக்கங்களையும் அவற்றின் உச்சமான வீச்சையும் நோக்கினால் அவை





உலகை முற்றாக அழிக்கும் சாத்தியமில்லை என்றே கூறலாம். இது தவிர அண்ட வெளியிலிருந்து ஏற்படும் தாக்கங்களாலும் பூமி அழியலாம். அதற்கான விஞ்ஞான ரீதியான சாத்தியக்கூறுகள் இருந்தால் இரண்டாயிரத்திற்குள் பிற்பட்ட அபிவிருத்தி வேலைகளில் இவ்வளவு முனைப்பாக உலகம் ஈடுபட்டிருக்க வேண்டிய அவசியமில்லையல்லவா. ஆனாலும் ஒரேயொரு விடயம் மட்டும் இங்கு முக்கியமானது; இப்போது இன அழிப்பையும் பட்டினிச் சாவையும் எதிர்கொண்டுள்ள ஈழத் தமிழினம் 2000 வரை தாக்குப்பிடிக்க முடியுமா? என்ற நியாயமான கேள்வியைத் தவிர்த்து 2000–ல் உலகம் அழியப் போகிறதெனக் கேட்பது எவ்வகையில் நியாயமானது என்பதே முக்கியமான கேள்வியாகும். இதற்கான எளிமையான பதிலை தகவல் துறையில் பணியாற்றும் தமிழரொருவர் கூறியுள்ளார். ஒரு தடவை தலையை மொட்டை வழித்தால் தலையில் மறுபடியும் முடி வளராது என்று மட்டும் இருந்திருக்குமானால் நாம் மொட்டை போடுவதாக நேர்த்திக்கடன் வைப்போமா? அதுபோலத்தான் 2000–ல் உலகம் அழியப் போவதாகக் கூறும் எவரிடமாவது 2000– ற்குப் பிறகு உமது சொத்துக்களை எழுதித்தர முடியுமா என்று கேட்டால் அதற்கு உலகில் யாருமே முன்வரமாட்டார்கள். மேலும் 2000–ல் உலகம் அழியுமெனக் கூறும் பலரின் வங்கிக் கணக்கைப் பார்த்தால் 2000–ற்குப் பிறகும் வாழ்வதற்கான சேமிப்பு அவர்களிடமிருப்பதை அறிதல் முடியும். இதிலிருந்தே 2000–ல் உலகம் அழியப் போகிறது என்னும் கேள்வியின் பலவீனத்தை நாம் எளிமையாக விளங்கிக் கொள்ளல் முடியும்.

# ஓடும் காரிலிருந்து பறக்கிறது விமானம்!






விடுதலைப்புலிகள் வன்னிப் பெருநிலத்தில் விமான ஓடுபாதையை அமைத்திருக்கிறார்கள். அதை நாம் குண்டுவீசி அழித்துவிட்டோமெனக்கூறி, பொதுமக்கள் குடியிருப்புகளின் மீது சிறீலங்கா விமானங்கள் குண்டுகளை வீசுவது நாம் பலதடவைகள் கேள்விப்பட்ட செய்தி. இப்பொழுது ஓடு பாதையே இல்லாமல் விமானத்தை இறக்கவும், பறக்கவும் வைக்க முடியுமென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார் பிரித்தானிய விமானியான ரிம் சீனியர்.

தன்னுடைய காரின் மேலுள்ள ஓர் விசேடமான, கொளுவி மூலம் தன்னிடமுள்ள பிரான்சில் தயாரான ‘கிறைகிறை’ விமானத்தை இணைத்துக் கொள்கிறார். இந்த விமானமே உலகின் சின்னஞ்சிறிய விமானம் என்பது குறிப்பிடத்தக்கது. விமானத்தை ஏற்றியபடியே ஒருவர் காரை 100 கி.மீ வேகத்தில் ஓடவேண்டும். இன்னொருவர் விமானத்திலிருந்து அதை ஸ்ராட் செய்து, பொருத்தமான தருணத்தில் அதை விடுவித்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான் ரிம்சீனியரின் பிற்கப்பிஸி கார் தரையில் ஓடிச்செல்ல, விமானம் ஆகாயத்தில் சுளுவாகப் பறந்து போகிறது. ஓடும் காரிலேயே விமானத்தை இறக்கிவிட மேலும் சிறிது பயிற்சி வேண்டும் என்று கூறுகிறார். இவை சாத்தியமாகிவிட்டால் சாதாரண வீதிகளோ மைதானங்களோ போதும் விமானத்தைப் பறக்கவிட்டுவிடலாம்.

# மாபெரும்



## டென்மார்க் தமிழீழ இசைக்குழு 1—வது இடம்

தமிழீழ விடுதலை என்பது தனியே இன விடுதலை மட்டுமன்றி சமூக, பொருளாதார அடிமைத்தனங்களிலிருந்தும் விடுபட்டு ஒரு சமத்துவ மான செழிப்பான எதிர்காலத்தை நோக்கிய பாதை யாகும். அமையப்போகும் தமிழீழத்தை செல்வச் செழிப்புடன் தன்னிறைவு தேசமாக உருவாக்கும் நோக்கிலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது. பல்வேறு நாடுகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது பணிகளை முடக்கிவிட்டிருந்த போதிலும், சுவிஸ் நாட்டில் அதன் பணிகள் அண்மைக்காலமாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் யாழ்முரி போட்டிகள் லண்டனில் 3 தட வைகள் நடைபெற்றாலும் முதல் தடவை ஒரு பரீட் சார்த்தமான முயற்சியே ஆகும். இம்முறை முதல் தடவையாக சுவிசில் "யாழ்முரி 98" போட்டிகளை நடத்துவதன் மூலம் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனம் அறிமுகமாகிறது. சுவிஸ் பணியக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், இங் குள்ள தமிழ் வர்த்தக நிறுவனங்களின் ஆதரவுடன் தனது கன்னி முயற்சியை வெற்றிகரமாக நடத்தியுள் ளது. சுவிசின் பிரதான நகரங்களில் ஒன்றான சூரிச்சில் 12.07.98 ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில், தமிழர்களின் மனங்களில் நிறைந்த அல்பிஸ் குட்லி மண்டபத்தில் "யாழ்முரி 98" மாபெரும் இசை விழா நடைபெற்றது.

டென்மார்க்கிலிருந்து பங்குபற்றிய டென்மார்க் தமிழீழ இசைக்குழுவுடன் சுவிசிலுள்ள கலைபண் பாட்டுக் கழக இசைக்குழு, சங்கமம் இசைக்குழு, விடுதலை கானம்பாடி (லக்ஷ்மி) இசைக்குழு ஆகிய 4 இசைக்குழுக்கள் கலந்து கொண்டன. எந்தவொரு செயற்பாட்டிற்கும் விளம்பரம் தேவைப்படுகிறது. இந்த "யாழ்முரி 98"—ஐ பொறுத்தவரை மிகவும் சிறப்பான விளம்பரம் இருக்க காணப்பட்டது. தமிழ் ஒலி, ஒளி ரேடியோ ஆசியா கனடா, சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (IBC) ஆகிய மூன்று ஒலி, ஒளிபரப்புக்களும் இந்நிகழ்ச்சியில் நேரடியாக கலந்துகொண்டு நேரடி ஒலி,ஒளி பரப்புக்களை



## சுவிஸ் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் 2—வது இடம்

செய்தார்கள். போட்டிகளை சிறப்பான முறையில் அறிவிப்புச்செய்து, பார்வையாளர்களின் பாராட் டைப் பெற்றார் திருமதி ஜெயந்திமாலா குணசீலன். போட்டி என்று வந்தால் நடுவர்கள் தேவைப்படுவார் கள். அந்த நடுவர்கள் மூவருமே இசைத்துறையில் நல்ல பண்டித்தியம் பெற்றவர்கள். சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம், வயலின் வித்துவான் நெய்வேலி எஸ். ராதாகிருஷ்ணன், பொன் சுந்தரலிங்கத்தின் மாணவன் கண்ணன் ஆகியோரே நடுவர்களாக கலந்துகொண்டார்கள்.

# இசைவிழா யாழ்முரி-98

அமைதி வணக்கம், மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பிக்க சுவிஸ் பணியக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் மத்தியிலே "என்னினமே என் சனமே...." என்னும் பொன்.சுந்தரலிங்கத்தின் புகழ்பெற்ற பாடலுடன் இசைவிழா ஆரம்பமானது. ஒவ்வொரு இசைக்குழுவும் 6 விடுதலை கானங்களை இசைத்தார்கள். அதில் 4 பாடல்கள் ஏற்கனவே வெளி வந்த பாடல்களாகவும் 2 பாடல்களை இசைக்குழுக்கள் தாமாக இயற்றி இசையமைத்து பாடவேண்டும் என்பது விதியாகும். நாலு இசைக்குழுக்களுமே திறமையில் குறைவின்றி இசைமழை கொட்டி, புள்ளிகளை பகிர்வதில் நடுவர்களுக்கு சிக்கலையும் கொடுத்தார்கள். இதனிடையில் விடுதலையின் முக்கியத்துவத்தையும், அதனூடாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்படவுள்ள செயற்திட்டங்களையும் செவ்வனே எழுத்துரைத்தார் சுவிஸ் ஒருங்கிணைப்பாளர்.

சுவிஸ் லக்ஷ்மி இசைக்குழு
3—வது இடம்



போட்டிகள் முற்றுப் பெற முடிவுகள் அறிவிக்கப்பட்டு டென்மார்க் தமிழீழ இசைக்குழு முதலிடத்தையும் சுவிஸ் கலைபண்பாட்டுக்கழக இசைக்குழு

சுவிஸ் பாசல் சங்கமம் இசைக்குழு
4—வது இடம்



இரண்டாம் இடத்தையும் விடுதலைக் கானம்பாடி இசைக்குழு மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. பங்குபற்றிய அனைத்து இசைக் குழுக்களுக்கும் யாழ்முரி நினைவுக் கேடயமும், வெற்றிபெற்ற இசைக்குழுக்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. பரிசில்களை பொன்.சுந்தரலிங்கம், ராதாகிருஷ்ணன், கண்ணன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள். இதற்குரிய செலவுப் பணத்தை தமிழ் வர்த்தக நிறுவனங்கள் முன்வந்து உதவியுள்ளார்கள். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேன்மேலும் தனது பணியை நன்கு தொடர்ந்து சிறப்பான பல திட்டங்களை முன்வைப்பார்கள் என எதிர்பார்த்து விழா இனிதே நிறைவை எட்டியது.


தொகுப்பு
சங்கையூர் குமார்

மீண்டும் உங்கள் திருப்திக்காக

# Woodlands

**தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது**

இன்று பல நாடுகளுக்கும் **மிகக்குறைந்த விலையில்** அதிக நிமிடத்துடன் தெளிவான தொனிவுடன் உரையாடுவதற்கு பாரிசில் முன்னனி தொலைபேசி அட்டையான **Woodlands C@ll**வாங்கி ஓர்முறை பேசிப்பாருங்கள்.




# WOODLands C@ll

தொடர்புகளுக்கு :
**வூட்லன்ஸ் உணவகம்**

## Woodlands Restaurant

**207, Rue Fg.St.Denis, 75010 Paris**
**Tel : 01 40 37 08 20 / Fax : 01 40 37 28 20**

மிக விரைவில் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

G.T.V

# GLOBAL TAMIL VISION

ORIENTAL CD க்கள்
AUDIO க்களுக்கு ஏக
விநியோகஸ்தர்கள்

ORIENTAL வெளியீட்டில்
தெலுங்கு, தமிழ்,
மலையாள பாடல்கள்
அடங்கிய CD க்கள்
போன்றவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

திரையுலகின் புதிய வரவு

திரையுலகின் புதியதோர் உதயம்

திரையுலகின் புதியதோர் நிறுவனம்

வர்த்தக ரீதியான தொடர்புகளுக்கு: **G.T.V**

**Tel: 01 42 09 02 57 - Fax - 01 42 09 06 38**